

மகுடம்

இது வெறும்
காதல் கவிதைகளின்
தொகுப்பு மட்டுமல்ல.

இதன் பல கவிதைகள்
இலங்கையின்
வரலாறு பேசுகிறது
இலங்கையின்
இயற்கை பேசுகிறது
இலங்கையின்
ஆன்மீகம் பேசுகிறது
இலங்கையின்
நம்பிக்கை பேசுகிறது
இலங்கையின்
அழகு பேசுகிறது

இது மட்டுமல்ல
இராவண மகாராஜாவின்
கீர்த்தி பேசுகிறது
அவர் வாளின்
மகிமை பேசுகிறது
அவர் கட்டடக் கலையின்
கம்பீரம் பேசுகிறது

- விக்டர்தாஸ்

வி. மைக்கல் கொலின்

# என் இனிய பட்டாம்பூச்சிக்கு

தொடரட்டும்
தமிழின் தொன்மைப்
பயணம்

- அருட்பணி.
அ.அ.நவரெத்தினம்

ராசாத்தி!

என் உயிர்ப் பறவையின்
சிறகசைப்பு நீ.

என் உடல் கூட்டின்
தணியாத வெப்பம் நீ.

என் பகல்களின் இரவு நீ.
என் இரவுகளின் பகல் நீ

என் வாழ்வின் நேசம் நீ.
என் உயிரின் சுவாசம் நீ.

கால நீள் பரப்பின்
முற்றுப் புள்ளி நீ.



## சமர்ப்பணம்

"நீ கவிதையும் எழுதடா"

என என்னை கவிதையும் எழுதத் தூண்டிய

எனது தமிழ் ஆசிரியை

**அமரர் திருமதி நவமலர் கந்தையா அவர்களின்**

பாதங்களில்..

# என் இனிய பட்டாம்பூச்சிக்கு

வி.மைக்கல் கொலின்

மகுடம்
இல.90, பார்வீதி,
மட்டக்களப்பு 30000
இலங்கை.

Title :

**En Iniya Pattampoochiku**

**© W.Michael Collin**

ISBN : 978 - 624 - 5849 - 04 - 8

**மகுடம் பதிப்பக வெளியீடு - 60**

*நூல் தலைப்பு:*

**என் இனிய பட்டாம்பூச்சிக்கு**

*நூல் ஆசிரியர்:*

**வி.மைக்கல் கொலின்**

*வகை :* **புதுக்கவிதை**

*முதற்பதிப்பு :* மே 2022

*விலை :* **750.00**

*பக்கங்கள் :* 136

*பதிப்பாளர்*

**வி.மைக்கல் கொலின்**

நூல்வடிவமைப்பு:

**த.சங்கர்**

அச்சு :

**வணசிங்க அச்சகம், மட்டக்களப்பு.**

இந்தப் புத்தகத்தின் எந்த ஒரு பகுதியையும் பதிப்பாளர் எழுத்துபூர்வமான முன் அனுமதி பெறாமல் மறுபிரசுரம் செய்வதோ, அச்சு மற்றும் மின்னணு ஊடகங்களில் மறுபதிப்பு செய்வதோ காப்புரிமைச் சட்டப்படி தடை செய்யப்பட்டதாகும் புத்தக விமர்சனத்திற்கு மட்டும் புத்தகத் திலிருந்து மேற்கோள் காட்ட அனுமதிக்கப்படுகின்றது

மகுடம்

**இல.90, பார்வீதி,**

**மட்டக்களப்பு 30000, இலங்கை.**

**தொ.பே.இல.** 0774338878,

magudammichael@gmail.com

**பதிப்புரை**

# ஈழத்து இலக்கியப் பரப்பில் தவிர்க்கவியலாத பெயர்

**வி.**மைக்கல் கொலின்

ஈழத்து இலக்கியப் பரப்பில் தவிர்க்கவியலாத பெயர். திருகோணமலையைப் பிறப்பிடமாகவும், சமகாலத்தில் மட்டக் களப்பினை வசிப்பிடமாகவும் கொண்ட இவர் திருகோணமலை, மட்டக்களப்பு என்ற இரு மாவட்டங்களின் கலை இலக்கிய வளர்ச்சிக்கும், உயர்ச்சிக்கும் ஆற்றிவரும் காத்திரமான பணிகள் காலம் அறிந்தது.

கவிஞர்,
எழுத்தாளர்,
குறும்பட இயக்குனர்,
சஞ்சிகையாளர்,
பத்திரிகையாளர்,

வெளியீட்டாளர் என பல்பரிமாணத் தளங்களில் இயங்கி வருபவர். இயங்குதல் என்பதற்கப்பால் மேற்குறித்த துறைகளில் தனது ஆளுமையை பதித்து வருபவர். 1992களில் வெளிவந்த இவரது **'என் பிரிய ராஜகுமாரிக்கு'** என்ற புதுக்கவிதைத் தொகுதியே திருகோணமலை மண்ணில் அச்சில் வெளிவந்த முதல் புதுக்கவிதைத் தொகுப்பாகும்.

கிழக்கு மண்ணில் இருந்து முதன்முதலாக தொலைக்காட்சி நாடக நெறியாள்கையில் “டிப்ளோமா” முடித்தவரும் இவரே. இதன் நீட்சியாக தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் நடாத்திய தொலைக் காட்சி நாடக பிரதியாக்கல் போட்டியில் அகில இலங்கை ரீதியாக பரிசு பெற்ற **'மரபை மீறும் மானுடம்'** என்ற தனது நாடக பிரதியினை 1993ல் குறும்படமாக நெறியாள்கை செய்தார். இதுவே திருகோண மலையின் முதல் குறும்படம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

திருகோணமலையில் 1985 - 1995 வரை இவர் வெளியிட்ட **'தாகம்'** கலை இலக்கிய புரட்சிகர முற்போக்கு இதழே திருமலையில் தொடர்ந்து பத்து வருடங்களாக வெளிவந்த ஒரே இலக்கிய

இதழாகவும் ஒரு இளம் எழுத்தாள குழாமை உருவாக்கிய பெருமையும் கொண்டது.

1995 காலப்பகுதியில் மட்டக்களப்பிலிருந்து '**ஃபீனிக்ஸ்**' என்ற பெயரில் நவீன தமிழ் கவிதா இதழை வெளியிட்டார்.

1997 காலப்பகுதியில் கிழக்குப் பல்கலைக்கழக தமிழ்ச் சங்கத்தின் செயலாளராகவிருந்து '**தழல்**' என்ற வருடாந்த இதழை தமிழ்ச்சங்கத்தின் வெளியீடாக வெளிக்கொணர்ந்தார் இதன் இதழாசிரியரும் இவரே.

மட்டக்களப்பில் இருந்து 1998இல் வெளியான '**தினக்கதிர்**' வாரமலர் 2000 இல் வெளிவந்த '**தினக்கதிர்**' நாளிதழ் ஆகியவற்றின் உருவாக்கத்தில் முக்கிய பங்காற்றி முறையே அதன் பிரதம ஆசிரியர், இணை ஆசிரியர் ஆகிய பதவிகளை வகித்தவர்.

2012 தொடக்கம் மட்டக்களப்பில் இருந்து **"மகுடம்"** என்ற கலை இலக்கிய சமூக பண்பாட்டுக் காலாண்டிதழை வெளியிட்டுவரும் மைக்கல் கொலின் வெளியீட்டாளராக தாகத்தின் மூலம் **ஆறு** நூல்களையும் மகுடத்தின் மூலம் **அறுபது** நூல்களையும் இதுவரை வெளியிட்டுள்ளார்.

இவர், முழுக்க முழுக்க இதிகாச புராணங்களை மறுவாசிப்புக்கு உட்படுத்தி எழுதிய '**பரசுராமபூமி**' என்ற சிறுகதைத்தொகுப்பே ஈழத்தின் இதிகாச புராண, மறைநூல்களை மறுவாசிப்புக்குட்படுத்தி வெளிவந்த முதல் சிறுகதைத் தொகுப்பாகும். இது 2018ம் ஆண்டுக்கான கிழக்குமாகாண சாகித்திய விருதினை பெற்றது குறிப்பிடத்தக்கது.

இவரது இரண்டாவது கவிதைத்தொகுப்பு '**சிலுவைகளே சிறகுகளாய்**' 2019ல் வெளிவந்து, அவ்வாண்டுக்கான தேசிய சாகித்திய விருதுக்கு பரிந்துரைக்கப்பட்ட மூன்று நூல்களில் ஒன்று என்ற தகுதிச் சான்றிதழ் பெற்றது. மேலும் இது அவ்வாண்டுக்கான இந்திய திருப்பூர் இலக்கிய விருதையும் பெற்றது குறிப்பிடத்தக்கது.

இவரது நான்காவது நூலாக வெளிவந்த '**வீணையடி நீ எனக்கு**' என்ற நாவலே கிழக்குப் பல்கலைக்கழக வாழ்வியலை சொல்லிய முதல் நாவலும் முழுக்க முழுக்க பல்கலைக்கழக வாழ்வியலைப் பேசி ஈழத்திலிருந்து வெளிவந்த மூன்றாவது நாவல் என்ற பெருமையையும் கொண்டதாகும்.

மைக்கல்கொலினின் ஐந்தாவது நூலாகவும் மூன்றாவது கவிதை நூலாகவும் வெளிவந்த '**இவனைச் சிலுவையில் அறையுங்கள்**' பாஸ்கா கால கவிதைகள் கிறிஸ்தவ இலக்கியத்தில் முதல் முயற்சியாகும். கத்தோலிக்கர்கள் அனுஷ்டிக்கும் 40 நாளுக்கு மேலான

நோன்பிருத்தலில் ஒவ்வொரு நாளுக்கும் ஒவ்வொரு கவிதையாக 2021ம் ஆண்டின் பாஸ்கா காலத்தை சிறப்பித்து பாடப்பட்ட கவிதைகள் இவையாகும். அந்த வகையில் புதிய ஏற்பாட்டை மறு வாசிப்புக்கு உட்படுத்திய முதல் கவிதை நூல் இதுவாகும்.

மைக்கலின் நான்காவது கவிதை நூல் தனது திருமண ஆண்டின் இருபத்திரண்டாவது ஆண்டினை சிறப்பித்து தனது காதல் மனைவிக்காக எழுதிய கவிதைகளை தொகுத்து வெளிவந்த **"எழுதித்தீரா பிரியங்கள்"** ஆகும். இதுவும் தமிழ் கவிதா உலகில் ஓர் முதல் முயற்சியேயாகும்.

மைக்கல் கொலினின் ஏழாவது நூலாகவும் அவரது ஐந்தாவது கவிதை நூலாகவும் வெளிவரும் **'என் இனிய பட்டாம்பூச்சிக்கு'** என்ற இக் கவிதை நூலும் தமிழ் கவிதா உலகிற்கு ஓர் முதல் முயற்சியே. தனது மனைவியின் பிறந்த நாளை முன்னிட்டு அவர் தொடர்ச்சியாக நாற்பத்தி நான்கு நாட்கள் முகநூலில் தொடராக எழுதிய கவிதைகளே இத்தொகுப்பில் உள்ளன.

காதல் மனைவிக்கு எழுதிய காதல் கவிதைகளாயினும் சரி அதனை சமகால, சம்பவங்களுடன், இடங்களுடன் இணைத்து இக்கவிதைகளுக்கு ஓர் புதிய பார்வையை கொடுத்துள்ளார் கவிஞர்.

கவிதையென்பது ஒரு வார்த்தை விளையாட்டு என்று சொல் வதில் உண்மையுண்டுதான். ஆனால் வெறுமனேயது வார்த்தை விளையாட்டுமில்லை. அனுபவங்களும் உணர்வுகளும் புத்தி சார்ந்தல்ல. மனம் சார்ந்து பதிவு செய்யப்படும்போதே அவை கவிதைகளாகின்றன.

முதற்தமிழ்க் கவிஞனிலிருந்து மைக்கல் கொலின் வரை, கவிதை மனதோடு தொடர்புடையதென்றே எண்ணங்கொண்டவர் களாக இருக்கின்றனர். அனுபவங்களும் உணர்வுகளுமே கவிதையா கும் என ஓர்மை கொண்டிருக்கிறார்கள். கவிதையென்கிற நுட்பமான ஊடகத்தின் வழியாக விந்தைதான் கொள்ள முடியும் என உணர்ந் திருக்கிறார்கள்.

ஈராயிரமாண்டுத் தமிழ்க் கவிதையும் இயல்பாகவே இருக்கிறது. மண்சார்ந்து மரபு சார்ந்து விளங்குகிறது. இதுதான் நம்மை விடுதலறியா விருப்புக்கொள்ள வைக்கிறது. பம்மாத்தும் பாசாங்கும் இல்லாதிருக்கிறது. இதனாலேயே மீண்டும் மீண்டும் படிக்கத் தூண்டுகிறது. வாழ்வைப் போல கவிதைகளும் வசீகரம் கொண்டிருக்கின்றன. வசீகரமே நம்மை ஈர்க்கிறது.

சங்கக் கவிதைகள் யாவுமே யதார்த்த தளத்தில் நிலை கொண்டவைதான். சங்கமே இதற்குச் சான்று. காதல், வீரமென

பொறிபுலன்களுக்கு அடங்காத வாழ்வைப் போற்றிக் கொண்டாட வில்லை தமிழர். மாய உலகின் மருட்சிக்கு மயங்கியரல்லர் நம்மவர். இருத்தலுக்கு வேண்டிய மறப்பண்பும், மெல்லிய உணர்வுக்கு மனம் பறி கொடுத்தவர்களாகவும் வாழ்பவர்கள் அவர்கள்.

கொலினின் கவிதைகளும் இவ்வாறான தொகைப் பண்புகளுள் அடங்குவன. தமிழ் மரபு போல் உள்ளீட்டில் கவனம் செலுத்துவதால் நேரடித் தன்மை பெறுபவை.

பொருள்தான் பெரிதென்றெண்ணி, வித்தகம் காட்டுவது வீணென்று இயம்புவன. மிகையில்லாது எழுதுவது, சுருக்கமாய்ச் சொல்வது, விஸ்தரிப்பது என இவையாவும் இந்நூலிலுள்ள கவிதைகளின் பண்புகள்.

பின் நவீனத்துவம் சார்ந்த கொண்டு கூட்டுப் பொருள் கோள், பூட்டுவிற் பொருள் கோள், பிறிது மொழிதல் என்றெல்லாம் எடுத்தாளப்படாத, வித்தைகளைப் புறந்தள்ளிய கவிதைகள். சுயம் கொள்ளும் வெளிப்பாடு, ஞாபகங்கள், மனித ஓவியங்களாய் மலரும் காதல் நினைவுகள், இளமைக்காலம் குறித்தலென நெஞ்சில் கனல் மணக்கும் பூக்கள்போல் ஸ்திதிகள்.

இவர் கவிதைகள் உத்திகளுக்காக மெனக்கெடாதவை. உள்ளடக்கமே உருவத்தைத் தீர்மானிக்கும் என விட்டுவிடுபவை. அகம் சார்ந்த கவிதைகளென்பதாலே அழகியலம்சம் பெறுபவை.

இன்று மட்டுமல்ல, சங்கக் கவிதைகளிலும் தலைவன் - தலைவியின் நுட்பமான காதலுணர்வுகள் அகப்பாடல்களாய் வடிவங் கொண்டமைந்தமையும் கவனங்கொள்ளத்தக்கது. வாழ்வின் கதியும் சுதியும் மாறுவதற்கேற்ப, இங்கு கவிதையின் முகமும் மாற்றங்கொள்கிறது. ஒரு மனிதனின் ஆதார உணர்வுகள் எக்காலத் திலும் நல்ல கவிதைகளாகவே உருமாற்றம் பெறும் என்பதற்கு இந்நூல் ஓர் உதாரணம்.

வாழ்த்துகளுடன்,

- கவிஞர். **அ.ச.பாய்வா**

அணிந்துரை

# காற்றேணி ஏறி கடல் மீதாடி நிலா பிடிக்கும் கவிதைகள்...

**க**டல் கடந்து ஒருநாள்
என் காதுக்கோர் அழைப்பு வந்தது.
கனத்த இரவு அது.

அப்போது கண் பூக்கும் ஒரு நீள் பயணத்தில்
கருஞ்சாலை முதுகில் காற்றில் உளி செதுக்கியபடி
காரோட்டிக் கொண்டிருந்தேன் என் குழந்தைகளோடு.

அந்நேரம் என் காதுரசிய
அந்தக் குரல் புதிது
அந்தத் தமிழ் புதிது
அந்த உச்சரிப்பு புதிது
அதில் வழிந்த அன்பு புதிது.

அந்த இனிப்புக் குரலுக்குச் சொந்தக்காரர்
இனிய சகோதரர், ஈரக் கவிஞர்
எங்கள் ஈழ தேசத்தின் கவிஞர்
திரு.வி.மைக்கல் கொலின் அவர்கள்.

எனக்கும் அவருக்கும் இடையேயான நட்பு
ஏழாண்டுகள் இதயமுடுத்திய ஒன்று.

அது
சோழன் பிசிராந்தைச் சொந்தம்.

இதோ!
கண்காணும் முன்பே
என் காதோர வீதிகளில் குரல் திருவிழா.

அந்த திருகோணமலைத் தமிழிலும்
மட்டக்களப்பு மகரந்தத்திலும்
வவுனியாக் காட்டுப் பறவை போல
வாயூறலாயிற்று என் நெஞ்சு.

திரு.மைக்கல் சொன்னார்
‘என் இனிய பட்டாம்பூச்சிக்கு’ என்ற
என் கவிதை நூலுக்கு
உங்கள் அணிந்துரை வேண்டும் கவிஞரே.

தருகிறேன் தாமதமாகும் காலம்
பரவாயில்லையா என்றேன்.

ஆனால் பத்து நாளினுள் என்ற நான்
சில மாதங்கள் சிறைசெய்து கொண்டேன்.

காரணம்
என் அலுவல்
என் பணிச் சுமை
என் இலக்கிய முன்னெடுப்புகள்
இப்படி நிமிடச் சூரியன்களின் நெற்றிகளுள் நெருக்கப்படும்
என் நீல விதானத்தின் நிமிடக் கொடுமைகள்
நெருப்பின் சாம்பல் சிறகுகளொத்தவை
கருப்பையின் அவஸ்தை வலிகள் கொண்டவை.

இப்படிப்பட்ட என் தாமதத்தில் கூட
சற்றேனும் சலிப்புறாத திரு.மைக்கல்
என் தமிழ் வளர்த்த வாழ்த்துக்குரியவராகிறார்
சீயோன் மலை கொடுத்த வார்த்தைக்குரியவராகிறார்.

சரி.
நூல் குறித்த என் பார்வைக்கு வருகிறேன்.

கால்காசு செலவில்லாமல்
காற்றேணி ஏறி கடல் மீதாடி
நிலா பிடித்துத் தொங்கிய
நித்திலம்பூ அனுபவம் உண்டா உங்களுக்கு.

இதோ!
அப்படிப்பட்ட ஒரு பேரனுபவத்தை
அழகான இந்நூலில் நான் பெற்றிருக்கிறேன்.

காயாம் பூக்களும் கோங்கம் பூக்களும்
கடைவிரித்தக் குறிஞ்சி மலைக்காட்டுள்
அருவி நீராடி அடை”தேன்” களவாடி
குருவி போல் பறந்த குதூகலம் கொண்டதுண்டா நீங்கள்.

இதோ!
அத்தகைய தேனானுபவத் தென்றலில்
திணறத் திணற திருவிழா கொண்டாடிய
தேவாமிர்த ருசியை
இந்தக் கவிதை நூலில் கண்டடைந்து
கரைந்துபோய் நான் நிற்கிறேன்.

மழைக்காற்று வீசும்
ஒரு மந்த மாருதப் பொழுதில்
கதிர்களில் பால்பிடித்த வயலோரங்களில்
காலாற வரப்பேறி பொடிநடை போட்டதுண்டா நீங்கள்.

இதோ!
அவ்வாறான ஒரு புதிய திக்குமுக்காடலை
ஆழமான இந்தக் கவிதை நூலில்
பெரும்பாலான வரிகளில்
பிழியப் பிழிய
பிரபஞ்ச ரகசியம் வழிய வழிய
வட்டிலில் வாரி வாயொழுகத் தின்றிருக்கிறேன் நான்.

ஒருபக்கம் மழை மறுபக்கம் வெயில்
இரண்டுக்கும் நடுவே ஒரு வானவில்லாகி
வாழ்ந்ததுண்டா நீங்கள்.

இதோ!
இந்தக் கவிதைநூல் வாசித்த போது
என் சாலைகளெங்கும் நிறச் சேலைகளின் நீள ஓவியங்கள்
கரம் பிடித்தெனக்கு கள்ளூற்றிக் கொடுத்தன.

சில கவிதைகளை என்னால் அள்ள முடியவில்லை.
ஆனால்
பல கவிதைகளினின்று என்னை மொள்ள முடியவில்லை.

நாம் கவிதை நூல்கள் நிறைய வாசிக்கிறோம் தாம்.

ஆனால் பெரும்பாலானவை
நம் நினைவு மண்டபங்களை
நெய்ப்பசை போல அப்பிக் கொள்வதுண்டா

இல்லையே.

ஆனால்
என் முதல் பார்வையிலேயே
“என் இனிய பட்டாம்பூச்சிக்கு” என்ற
இந்தக் கவிதை நூல்
என் கண்களில் மணிபோல கட்டிக் கொண்டது
என் நெஞ்சினில் பனிபோல ஒட்டிக் கொண்டது.

காரணம்
கவிஞர் தன் மனங் கவர்ந்தவருக்கு
இந்தத் தாழம்பூக் கவிதைகளை தருவித்த போதும்
தன் தமிழாசிரியருக்கு இதை அவர்
சமர்ப்பித்திருக்கிறார் என்ற போதே
என் அன்பின் மைக்கல்
என் தாழ்வார ஆகாயத்தில்
தங்க நாற்காலி போட்டு சம்மணமிட்டுக் கொள்கிறார் என்றால்
சற்றேனும் மிகையில்லை.

தனக்கு கற்றுத் தந்தவருக்கு
தான் பெற்று வந்தவற்றை
பரிசாக நீட்டுகிற பண்புக்கும் மாண்புக்கும்
பெரியதொரு வாழ்த்துகள் திரு.மைக்கல்.

இன்னொரு வியப்பும் இந்நூலில் எனக்கிருந்தது.

அது யாதெனில்
இது வெறும் காதல் கவிதைகளின் தொகுப்பு மட்டுமல்ல.

இதன் பல கவிதைகள்
இலங்கையின் வரலாறு பேசுகிறது
இலங்கையின் இயற்கை பேசுகிறது
இலங்கையின் ஆன்மீகம் பேசுகிறது
இலங்கையின் நம்பிக்கை பேசுகிறது
இலங்கையின் அழகு பேசுகிறது

இது மட்டுமல்ல
இராவண மகாராஜாவின் கீர்த்தி பேசுகிறது
அவர் வாளின் மகிமை பேசுகிறது
அவர் கட்டடக் கலையின் கம்பீரம் பேசுகிறது

இதை வாசிக்கிற போது,

“மா காரின் மின்கொடி மடக்கினர் அடுக்கி
மீகாரம் எங்கணும் நறுந்துகள் விலக்கி
ஆகாய கங்கையை அங்கையில் அள்ளி
பாகாய செஞ்சொலவர் வீசுபடு காரம்”

“பொன்கொண்டு இழைத்த மணியைக் கொடு பொதிந்த
மின்கொண்டு அமைத்த வெயிலைக் கொடு சமைத்த
என்கொண்டு இயற்றிய எனத் தெரிகிலாத
வன்கொண்டல் விட்டு மதி முட்டுவன மாடம்”

என கம்பன் இலங்கையைப் பேசியதெல்லாம்
இதயத்தில் நிழலாடுகிறது.

இராஜ இராஜ சோழன் பற்றி
இவர் கவிதைகள் நாவாடுகிற போது

“கச்சி ஒருகால் மிதியா ஒருகாலால்
தத்துநீர்த் தண்ணுஞ்சை தான்மிதியாப்-பிற்றையும்
ஈழம் ஒருகால் மிதியா வருமே”

என சோழ மன்னனைப் பற்றிய
முத்தொள்ளாயிரம் எல்லாம்
மூளையுள் முற்றுகையிடுவதைத் தவிர்க்கவே முடியவில்லை.

இவரின் தமிழ்ப்பற்றை
தமிழ்ப் பண்பாட்டை
தமிழர் மீதான நேசத்தைக் காண்கிற போது

“தமிழ் எனது இருகண் பார்வை
தமிழ் எனது உருவப் போர்வை
தமிழ் எனது உயிரின் காப்பு
தமிழ் எனது உள ஏமாப்பு
தமிழ் எனது உடைமைப் பெட்டி
தமிழ் எனது உயர்வுப் பட்டி
தமிழ் எனது உரிமை”

என தமிழின் மேன்மை பேசிய
புலவர் குழந்தையின் இராவண காவியம்
என் ஞாபக மண்டபங்களில் நின்று கொண்டு
பூங்கொத்துகள் நீட்டத்தான் செய்கிறது.

இப்படி பல்வேறு அனுபவங்களை
ஒரு கவிதைத் தொகுப்பு உற்பத்தி செய்யுமா என
உயிருருக உறைந்து போகிறேன்.

ஒரு காதல் கவிதைத் தொகுப்பில்
தமிழ் இனம் பற்றி
தமிழ் நிலம் பற்றி
தமிழ் மொழி பற்றி
தமிழ்ப் பாரம்பரியம் பற்றி
தமிழ்ப் பண்பாடு பற்றி
இதன்முன் இந்தளவு எவரும் பேசியதாக
என் கண்ணுக்கெட்டிய தூரம் வரை
தகவல்கள் இல்லை என்பதே உண்மை.

ஆனாலும்
காதலொழுகும் கற்கண்டுச் சொற்களுக்கோ பஞ்சமே இல்லை.

முதல் கவிதையே ஒருவித மோகன ராகம் இசைப்பதை
வாசிப்பவர்கள் அறியலாம்.

சான்றுக்கு
அந்தச் சந்தன வரிகளைச் சபைக்கு அழைக்கிறேன்.

**“வார்த்தைகளுக்குள் அடங்கா கவிதையாய்**
**இன்னும்**
**கண்ணாமூச்சி காட்டுகிறது**
**உன்**
**வெட்கமெனும் பட்டாம்பூச்சி”**

ஒரு பெண்ணின் பார்வையை
இப்படிக் கூட எழுத முடியுமா என
வியப்பின் விளிம்பில் விழ வைத்த வரிகளை
இதோ! உங்கள் கண்களுக்குக் கடத்துகிறேன்.

**“வனாந்தரங்களை ஊடறுக்கும் நதியைப்போல்**
**என்னை ஊடறுக்கும்**
**உன் பார்வை நதி”**

இன்னொரு கவிதை
என் கண்களில் வினாக்குறிகளை விளைச்சல் செய்தது.

அது இது

**“உன்னைப் பின் தொடர்வதே**
**என் புதிய சிலுவைப் பாதை”**

சமகால கொரோனா துயரத்தில்
இஞ்சி மச்சள் பூண்டு எலுமிச்சையொடு
ஆவி பிடிக்காதவர்கள் இருப்பதரிது.

ஆனால் திரு.மைக்கல் கொலின் சொல்கிற
ஆவி பிடித்தல் என்பது
நூறு சதவீதம் காதலின் ரசவாதம்.

வரிகள் கேளுங்கள்

**“என் கரங்களில் சூடானத் தேநீர்க் கோப்பை**
**அதில்**
**ஆவியாக நீ வெளியேறிக் கொண்டிருந்தாய்**
**நான் வியர்த்திருந்தேன்**
**ஆவி பிடிப்பது நல்லதாம்”.**

கதைகளில் கவிதை சொல்வது இயல்பு.

பொன்னியின் செல்வன்
கதைப் பிரவாகத்தில் கூட
கவிதைப் பறவைகள் ஆங்காங்கே பறக்கும்.

ஆனால்
கவிதையில் கதை சொல்வது அத்தனை எளிதல்ல.

அதை இங்கே
நிசப்படுத்தி இருக்கிறார் திரு.மைக்கல் கொலின்.

நிலவைத் திருடியது யாரென
நில உலகே நிலை தடுமாறுகிறதாம்.

கடைசியில்
இவர் காதலியின் கண்களுள் தான்
நிலா உள்ளதென நிரூபணம் ஆகிறதாம்.

அந்த நிலாவை
திரும்பப் பெற வந்தவர்கள்
இவர் தேவதை கண்ணில்
தேன்நிலாக்கள் இல்லையென
திரும்பிப் போய்விடுகிறார்களாம்.

எப்படி என குழப்பம் வருகிறதா

அப்படியே நானும் குழம்பி நின்றேன்.

திரு.மைக்கல்
வேறொரு தீபாராதனைத் தட்டை
வெள்ளைத் திரி கொளுத்தி
இப்படி ஒரு தீபம் ஏற்றுகிறார்.

அது இது

**“நீங்கள்
முதல் முதலாய்த் தந்த
முத்தத்தை நினைத்தேன்
நிலவு
சூரியனாகி விட்டது”** என்றாள்.

கற்பனை
கர்லாக்கட்டை சுற்றிய இடம் இதுவெனில்
எவனும் மறுத்துவிட முடியாது.

மட்டக்களப்பு கல்லடி பாலம் மறக்க இயலாத ஓரிடம்.

என் தாத்தா
அவ்விடம் பற்றி ஆயிரமாயிரம் கதைகள்
அந்நாளில் சொன்னதுண்டு.

அதில் ஒன்று
அமுத ஒளி சுரக்கும் பௌர்ணமி நள்ளிரவில்
மீன்கள் பாடும் என்ற ஒரு கதை.

அதை
அத்தனை அழகாக
அத்தனை தத்ரூபமாக
அத்தனை ரசனையாக
காதல் குழைத்து கருணை இழைத்து
ஈரம் வளைத்து இதயம் துவைத்து
ஒரு கவிதை செய்திருக்கிறார்
நம் மைக்கல்.

அதில்
காதல் மட்டுமல்ல
கண்ணீரும் கூடவே வந்தது.

வரிகளை வாசிக்கிறேன் கேளுங்கள்

**“எம் மக்கள் நிலை கண்டு**
**மட்டக்களப்பு வாவி மீன்கள்**
**அழுத சத்தம் கேட்டது”**

**“சந்தியாகால வேளை**
**படகில் இருந்து மீண்டு வருகையில்**
**உன் கூடவே வந்தது**
**மீன்களின் பாடல் சத்தம்”**

ஒருவிதமான இறுக்கமும் நெருக்கமும்
வருத்தமும் வாஞ்சையும்
இந்தக் கவிதை எனக்குள் எழுதிப் போன தடங்கள்
இன்னும் கிடக்கிறது எனக்குள்
ஈரங் காயாமலே ஈரல்குலை ஓரத்திலே.

சாமி ஊர்வலத்தையும்
தாவணிக்காரியின் ஜல தீர்த்தத்தையும் இவரெழுதியது
ஒப்புவமையின் மச்சம்
உன்னதக் காதலுக்கு உச்சம்.

வார்த்தைகள் கவனியுங்கள்

**“குளக்கட்டில் நீயும் சாமியாய்.**
**உன் கால்களைச் சுற்றி**
**பக்தர்களாய் குளத்து மீன்கள்”**

அடடா!
குளத்துக்கே குப்பென்று வேர்த்திருக்காதா என்ன.

இன்னொரு எதார்த்தம்
இவர் கவிதையாக இதோ!

**“ஆயிரத்துக்கு மேலான**
**தொட்டில்கள் தொங்கவிடப் பட்டிருந்தன.**

**ஒவ்வொரு தொட்டிலிலும்**
**எத்தனை எத்தனை கனவுகள்?**

**எத்தனை ஆயிரம் இதயங்கள்**
**இங்கே தொங்கிக் கொண்டிருக்கிறதோ?”**

குழந்தைகள் தேடி அழுத விழிகளோடு நிற்கும்
அத்தனை ஆண் பெண்களும்
என் கண்ணீரில் மிதக்கிறார்கள்.

சிறுவயதில் மின்மினிப் பூச்சி என்பதே ஓர் அதிசயம்.

அதன் மேனி விளக்கு விளங்க முடியாத ஆச்சரியம்.

பறக்கும் நட்சத்திரம் அது என
நம்பும் பாமரர்களில்
இப்போது வரை நானும் ஒருவன் என்பதே என் பலம்.

திரிகளில் இருந்து
கழன்ற தீபமா அந்த மின்மினிப் பூச்சி.

கத்தரித்த நிலாத் துண்டுகளின்
மிதக்கும் சிறகா அந்த மின்மினிப் பூச்சி.

எவளோ ஒரு தேவதையின்
நகரும் நகமா அந்த மின்மினிப் பூச்சி.

இயற்கை தந்த
இரவு நேர எல் ஈ டீ பல்பா அந்த மின்மினிப் பூச்சி.

இப்படியெல்லாம் நாம் எண்ணுவதொன்றும்
புதியதல்ல புதுமையல்ல.

அதை கம்பன் இப்படிச் சொல்கிறான்

“சூட்டுடைத் துணை தூநிற வாரணம்
தாள் துணைக் குடைய தலை சால் மணி
மேட்டு இமைப்பன மின்மினி ஆமென
கூட்டின் உய்க்கும் குரீஇயின் குழாம்அரோ”

இவையெல்லாம் கூட வியப்பல்ல.

ஆனால்
நம் மைக்கல் கொலின் சொல்வது கேளுங்கள்.

உங்கள் பால்யகால ஞாபகங்கள்
உங்கள் பக்கம் வரும்
கூடவே வெட்கம் வரும்.

வரி இதுதான்.

**“எங்கும் இருள்**
**நீ மின்மினியாய் மாறிப் போனாய்.**

**ஒரு வெற்றுத் தீப்பெட்டியுடன்**
**மின்மினி பிடிக்க அலையும் சிறுவனாய்**
**உன் பின்னே நான்”**

ஆஹா!
கருவேலங் காடுகளில் கரும்பனைக் கூடுகளில்
காக்கா முட்டை தேடியலைந்த
என் கால்சட்டைக் காலமெல்லாம்
கைவீசம்மா கைவீசு பாடுகிறதே.

கிளியோபாட்ரா
மடோனா
டயானா
இவர்களைப் பற்றி ஏதாவது ஒன்று கூட எழுதாமல்
எந்தவொரு கவிஞனின் கவிதைகளும்
முற்றுப் பெற்றதாக சான்றுகளே இல்லை.

இதோ!
நம் மைக்கல் கிளியோபாட்ரா தொடுகிறார்.

அங்கேதான் அவர் கவிதை
ஆயிரஞ் சூரியப் பிரகாசம் எய்துகிறது.

அவர் சொல்கிறார்

**“நீ தொலமியின் சந்ததியில் வந்த**
**ஏழு கிளியோபாட்ராக்களில் ஒருத்தியல்ல**
**எட்டாவது கிளியோபாட்ரா”**

கிளியோபாட்ராவும்
மைக்கல் தோழியும்
இதைப் படித்த பிறகுதான்
யுத்த களத்திற்குத் தயாராகி இருப்பார்கள் என்பது என் கணிப்பு.

கவிஞன் நிம்மதியாக ஒருபோதும் இருந்துவிடக் கூடாது.

ஊடலின் யுத்தம் உரசாமல்
கூடலின் கவிதைகள் கூடு கட்டாதே

கவிஞன் படும் கலவரம் ரணகளம்
அது கவிதைகளுக்கான மலர்வனம் குதூகலம்.

மலைக்கோயில் போன மைக்கல்
அங்கேயும் ஒரு மன்மதத் தேநீர் கவிதை தருகிறார்.

வரி இதுதான்

**“கடையில் கிடைக்கும் தேநீர் முழுதும்
மலையின் மர வேர்களின் வாசம்”**

குறிஞ்சி பாடிய கபிலனை வாசிக்கிற போது எப்படி
மலைகளின்
மரங்களின்
மலர்களின்
காடுகளின் பச்சை வாசனை
கைகளில் பிசுபிசுக்குமோ
அப்படி நசநசக்கிறது கவிதை.

பெண்களைப் புகழாதவன் கவிஞனில்லை
பெண்களை மதிக்காதவன் மனிதனே இல்லை.

இதோ!
அதற்குச் சான்று கூறுகிறது இந்தக் கவிதை.

**“விளையாட்டில் மட்டுமல்ல
வாழ்க்கையிலும்
ராஜாவைக் காப்பது ராணிதான்”**

ஒப்பனையற்ற உண்மை இது.

பெண்களை உயரம் தூக்கும் நிசம் இது.

இதற்காகவே
இந்தத் தொகுப்பை
பெண்கள் அனைவரும்
வாங்க வேண்டும் வாசிக்க வேண்டும் என
வற்றாத அன்போடு அழைக்கிறேன்.

தமிழின் தொன்மையை
இந்தக் கவிதை இப்படிப் பேசுகிறது.

**“முள்ளிவாய்க்காலில் வீழ்ந்தாலும்
கீழடியில் எழுந்து நிற்போம்”**

உச்சரிக்கும் போதே
உதட்டோரம் கண்ணீரால் கரிக்கிறதே.

தமிழனின் கட்டடக் கலையை
இன்னொரு கவிதை இப்படித் தூக்கிப் பிடிக்கிறது.

**“பைசா கோபுரமே சாயும் போது
தஞ்சைப் பெருங்கோயில் நிமிர்ந்தே நிற்பது
தமிழர் கட்டடக் கலையின் உச்சம்”**

இப்படி
ஏராளமானப் புதையல்கள்
பாதையெங்கும் பரவிக் கிடக்கின்றன.

பொது அறிவியல் செய்தியும்
இந்த நூலில் இல்லாமல் இல்லை.

ஒன்றைச் சொல்கிறேன்.

**“வலசை போகும் பறவைகள்
தங்கள் பயணத்திற்காய்
அதிகம் உண்டு கொழுப்பைச் சேமிப்பது போல்”**

**“பாலைவன ஒட்டகங்கள்
அதிக நீரைக் குடித்து இரைப்பையையும்
கொழுப்பால் தமது திமிலையும் நிரப்புவது போல்”**

இப்படி பொது அறிவுப் பொக்கிஷங்களாலும்
பூப்பூத்திருக்கிறது இந்தப் பாத்தொகுப்பு.

காதலை
இயல்பாக
எளிதாக
நுட்பமாக
செப்பமாக
கனிவாக
கனமாக
பல கவிதைகள் பதியமிட்டுள்ளன என்பது
பொத்தி வைக்க முடியாத பொட்டல உண்மை.

இதோ!
சாட்சிக்கு ஒன்றிரண்டை
என் சட்டைப் பையினின்று சபை தருகிறேன்.

**“நீ அருகில் வருவது
மழை வருவதற்குச் சமமானதே”**

**“நீ கண்களை மூடிக் கொள்கிறாய்**
**நான் கனவு காண்கிறேன்”**

**“என் கனவுக்குள் வந்து விட்டு**
**சொல்லாமல் சென்றதென்ன”**

**“முத்தொன்று**
**சிப்பிகளைப் பொறுக்கும் மாயம்”**

இப்படி அதிக அதிகமாக
மணியாரங்களும் வைர வடங்களும்
மரகத மாலைகளும் மாணிக்கக் கோவைகளும்
தங்க நாணயங்களும்
கவிதைகளாக இந்தத் தொகுப்பு முழுதும்
இறைந்து கிடக்கின்றன என்பதற்கு
வாசித்த நானே சாட்சி.

திரு.மைக்கல் கொலின் சிறப்பு எதுவெனில்
எளிய சொல்லாட்சி
சிக்கலில்லாத உவமைகள்
கண் தாண்டாத கற்பனைகள்
மொழி மீதான முனை முறியாத பற்று
ஊர் மீதான காதல்
சாண்டியல்யனையும் விடாத தன்மை
பழைய வரலாறு மறவாத குணம்
கூடவே அத்தனையிலும்
தன் காதலியை ஏற்றிப் பாடும் பிரியம் துணிச்சல்
இவை இந்தத் தொகுப்பின்
அறுக்க முடியாத பலம் எனக் கருதுகிறேன் நான்.

தமிழறிந்த ஒவ்வொருவரும்
இந்தக் கவிதை நூலை
கண்டிப்பாக வாசிக்க வேண்டும்.

எல்லாம் வர்த்தகமாகிப் போன இந்நாளில்
இதயப் பாறைகளை இளக்க
இந்தக் கவிதை நூல்
நிச்சயம் உதவி செய்யும்.

மனித நேயம்
சக மனிதப் பண்பு

உறவு வளர்த்தல்
உலகு பெருக்கல்
வீதி இறங்கி வான் பார்த்தல்
அறியாதவரோடும் அளவளாவுதல்
இப்படிப்பட்ட மனித குணங்களை
இதுபோன்ற நூலன்றி
வேறெது தர முடியும் நமக்கு.

அதற்காகவாவது
இந்நூலை அனைவரும் வாங்குதல் அவசியம்.

திரு.மைக்கல் கொலின்
இலக்கிய உலகில்
நீண்ட நெடும் அனுபவம் உடையவர்
பல நூல்கள் எழுதியவர்
தேர்ந்த எழுத்தாளர்
சிறந்த கவிஞர்.

அவரை ஆரத் தழுவி அன்பொழுக வாழ்த்துகிறேன்.

இந்த நூல்
பெரும் வெற்றி பெறும்
பெற வேண்டும் என விரும்பி வாழ்த்துகிறேன்.

திரு.மைக்கல் கொலின்
இன்னும் பல நூல்கள் வெளியிட வேண்டும்.
தமிழுக்கு இன்னும் பல சேவைகள் செய்ய வேண்டும்.

அவருக்கு நல்ல ஆரோக்கியமும் நீடிய ஆயுளும் தர
எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சிகிறேன்.

திரு.மைக்கல்
தித்திக்கும் தமிழின் தங்க மைல்கல்.

அவர் வாழ்க வளர்க வெல்க.

தமிழ் வாழ்க
தமிழே ஆள்க.

அன்பன்
**- விக்டர்தாஸ்**
(தமிழ்நாடு)

அணிந்துரை

# கொலினின் காதற்கவிதைகளுக்கு அகவை முதிர்வதில்லை...

இலக்கிய வடிவங்களிலே கவிதை என்பதை ஒரு வாயு வெனலாம். அடக்கப்படும் குடுவையின் வடிவம், அளவு என்பதற் கேற்பச் சுருங்கியோ விரிந்தோ நிறைந்திருக்க வேண்டுவது கவிதை. சொல்ல வரும் கருத்தைச் சொல் பொருந்தச் செதுக்குகையிலே உணர்வைப் பங்கப்படுத்தாது எத்துணை ஒழுக்காய்ப் பாயவிடு கிறதிலேதான் ஒரு கவிஞரின் திறமையும் புலமையும் வெற்றி பெறுகின்றன. அவ்வகையிலே, காதல்கவிதைகளிலே மைக்கல் கொலின் எப்போதும் தன்னிடத்தை நிலைநிறுத்திக்கொள்கிறார்.

கொலினை என் அம்மாவிடம் தமிழ் கற்ற மாணவராக எண்பதுகளின் பின்னரைக்காலத்திலே அறிவேன். அக்காலத்தின் ஒரு கட்டத்திலே அவர் ஆசிரியராகவிருந்து ரோணியோவாகவும், பின்னர் அச்சிலும் நடத்திய தாகம் சஞ்சிகைக்கு எழுதியதாலே எமக்கிடையே பழக்கமேற்பட்டது. அக்காலகட்டத்திலே திருகோண மலையின் கலை, இலக்கிய, ஓரளவுக்கு அரசியலை வெளிப்படுத்திய தாகம், கோணைத்தென்றல் போன்ற சஞ்சிகைகளின் பங்களிப்பு வரலாற்றுப் பதிவாக முதன்மைபெறுவன என்பதை இவ்விடத்துச் சுட்டவேண்டும். நாளுக்கு நாள் நாட்டின் சமநிலை பிறழும் அரசியல், பொருளாதாரச் சூழலிலும் தொடர்ச்சியாக முப்பத்தியெட்டாண்டுகள் கலை இலக்கியச்செயற்பாடுகளிலே படைப்பாளியாகவும், பதிப்பாள ராகவும் தொடர்ந்தும் சோராதியங்குவதென்பது கடினமானது. அதைக் கொலின் சாத்தியப்படுத்திக்கொண்டிருப்பதைக் காணுகை யிலே வியப்புடன்கூட மகிழ்ச்சியும் ஏற்படுகின்றது.

'என் இனிய பட்டாம்பூச்சிக்கு' கவிதைத்தொகுப்பினை வாசித்து முடிக்கையிலே முதன்மையாகப்பட்டவை இரண்டு ஒன்று கொலினின் காதற்கவிதைகளுக்கு அகவை முதிர்வதில்லை தொடர்ச்சியாக இளமையும் அன்பும் ததும்புவதாகவே தொடர்கின்றன. காலத்தால், சூழலால் சலிக்காது கணத்துக்குக் கணம் காதலில்

அமிழ்ந்திருப்பதென்பது பெரும்பேறு. அப்படியான களியுள்ளம் வாய்த்தவர் கவி கொலின்.

அடுத்து, அவரின் கவிதைகளிலே சிறக்கத் தெரிவது அவருக்கு காதலுக்கான களமும் கணமும் விரியும் வகை; நிலவின் கீழே பாலத்தடியிலே தோன்றுகிறது; நிலவின் பார்வையாகவே தோன்றுகிறது; குன்றின்மீது கடவுளராய்த் தோன்றுகிறது; கடவுளையே சர்ப்பம் பற்றி மிதித்துக் கேள்வி கேட்கத் தோன்றுகிறது. கனியிலே தோன்றுகிறது; கல்லிலே தோன்றுகிறது; காதணியிலே தோன்றுகிறது; கடல் கடந்த சாம்ராஜ்யங்களிலே தோன்றுகிறது. காண்பதிலெல்லாம் காணுகையிலெல்லாம் கவிதையை முளைக்கச் செய்வது ஒரு கவிஞனுக்காகக் கிட்டிய அமுதசுரபி. அவ்வரம் கிட்டியிருப்பவர் கொலின் என்பதை இத்தொகுதியின் ஒவ்வொரு கவிதையும் தெள்ளெனக் காட்டுகிறது.

கொலினின் இலக்கிய முகத்துக்கு அப்பாலும் இத்தொகுதி யினைப் பார்க்கும்போது தெரிவது அவரின் நன்றிகொள் உள்ளம். ஆசிரியர் என்பவர் வெறுமனே ஊதியத்துக்கான தொழில் செய்கிறவர் என்பதற்கும்மேலாக, ஒளிந்திருக்கும் திறமையை அடையாளங்கண்டு வழி காட்டி உற்சாகப்படுத்தியதை வெகுகாலம் பின்னரும் நினைவிலே கொண்டு தன் ஆசிரியருக்கு இந்நூலைச் சமர்ப்பித்திருப்பது இக்காலத்திலே மிகவும் அரிதானவொன்று. தனிப்பட, அவ்வாசிரியர் என் அன்னையார் என்பதையிட்டுப் பெருமிதம் கொள்ளும் வேளை யிலே கொலினுக்கு நன்றியையும் தெரிவிக்கக் கடப்பாடுள்ளேன்.

தொடர்ச்சியாக, மேலும் வழி விரிந்து ஆழமும் அகலமும் பெருக, படைப்பாளியாகவும் பதிப்பாளராகவும் கொலின் இயங்க வாழ்த்துகிறேன்.

நட்புடன்,

- பேராசிரியர் க. **இரமணிதரன்**

**(சித்தார்த்த சேகுவேரா)**

அமெரிக்கா

**என்னுரை**

# காதலைச் சுமந்த ஒரு தொன்ம யாத்திரையாக...

**ந**ண்பர்களுக்கு என் இனிய வணக்கம்.

எனது காதல் மனைவியின் பிறந்த தினத்தை முன்னிட்டு (22-05-2021) ஓர் புது முயற்சியாக, முதல் முயற்சியாக என்னால் ஆரம்பிக்கப்பட்ட **என் இனிய பட்டாம்பூச்சிக்கு** என்ற இக்காதல் கவிதைத் தொடர் தொடர்ந்து நாற்பத்திநான்கு நாட்கள் எனது முகநூலில் பதியப்பட்ட கவிதைகளின் தொகுப்பாகும்

காதல் கவிதைத் தொடராக ஆரம்பிக்கப்பட்டாலும் வாசகர்களான நீங்கள் தந்த ஆதரவும், உங்கள் கருத்துகளும் இக்கவிதைகளை வேறொரு தளத்திற்கு இட்டுச்சென்றது உண்மை.

காதல் கவிதைகளுக்கூடாக எமது தொன்மங்களையும், தமிழர்தம் வாழ்க்கை முறையினையும், எமது மண்ணின் சரித்திரத்தையும் தேடும் முயற்சியாக காதலைச் சுமந்த ஒரு தொன்ம யாத்திரையாக இது மாறிப்போனது.

திருக்கோணேஸ்வரம், மாமாங்கேஸ்வரம், கல்லடி பாடும்மீன், சிகிரியா, சிவனொளிபாதமலை, கீழடி, அகஸ்தியர் ஸ்தாபனம், தாஜ்மகால், தஞ்சை பெரியகோயில்,சோழப்பேரரசு, தென்னவன் மரவடி, ஏதேன் தோட்டம், செவ்வாய்க்கிரகம், கன்னியா வெந்நீரூற்று, கம்போடியா ஹங்கோவாட், அம்பிகாபதி - அமராவதி காதல் காவியம், ஆண்டாள், கிளியோபட்ரா, சதுரங்கம், பரமபதம் என எழுதி காதல் கவிதையில் ஓர் மாற்றத்தைக் கொண்டுவர துணை நின்ற நண்பர்கள் உங்கள் அனைவருக்கும் எனது இதய நன்றிகள்.

இக்கவிதைகள் ஒரே நேரத்தில் எனது முகநூல், மற்றும் படைப்புக்குழுமம், இரண்டு what's app குழுமங்கள் என நான்கு இடங்களில் ஒரே நேரத்தில் பதிவு செய்யப்பட்டது.

நான் ஆரம்பத்தில் சொன்னது போல் இந்தக் கவிதைகளில் ஏதாவது ஒன்றில் நீங்கள் உங்களை தரிசிக்கலாம் அல்லது அந்த அனுபவத்தைப் பெறலாம் என்பது. அதேபோன்று பலர் இக்கவிதை

களில் தமது இளமைக் காலத்தையும், காதல் வாழ்வையும் ரசித்தனர். அதில் ஊறிக் களித்தனர், திளைத்தனர். இதுவே இக்கவிதைகளின் வெற்றியாகும்.

இக் கவிதை நூலிற்கு நல்லதொரு அணிந்துரையை எனது கவிதைகளுக்கான அடையாளமாக எழுதித் தந்த பாவினத்தின் சகல வடிவங்களிலும் கவி வடிக்கும் வல்லமை கொண்ட எனதினிய நண்பர் கவிஞர், பாடலாசிரியர் திரு மிகு விக்டர்தாஸ் (தமிழ்நாடு) அவர்களிற்கும், திருகோணமலை மண்ணின் மைந்தன் பேராசிரியர், எழுத்தாளர் அன்பு அண்ணன் திருமிகு க. இரமணீதரன் (சித்தார்த்த சேகுவேரா) (அமெரிக்கா) அவர்களுக்கும் பதிப்புரை தந்த அன்புக் கவிஞர் அ. ச. பாய்வா அவர்களுக்கும் எனது அன்பான நன்றிகள்.

இக்கவிதைகள் வெளிவந்த நாற்பத்தி நான்கு நாட்களாக என்னுடன் சிறகடித்து வந்து தினமும் தங்கள் விருப்பக் குறியீடுகளி னாலும், கருத்துகளினாலும் எனக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்த எனது முகநூல் உறவுகளுக்கும் அன்பின் நன்றிகள்.

மேலும் எனது கனவு நூலான இக்கவிதை நூலை சிறந்த முறையில் அச்சடித்த வணசிங்கா அச்சக நண்பர்களிற்கும், இந் நூலின் அட்டைப்படத்தை வெகு சிறப்பாக வடிவமைத்த நண்பர் திரு.த.சங்கர் அவர்களிற்கும் இதய நன்றிகள்.

இக்கவிதைகள் வெளிவந்த காலங்களில் பொருத்தமான ஓவியங்களை தெரிவு செய்து தந்ததோடு என் இலக்கிய பயணத்திற்கு துணை நிற்கும் என் அன்பு மனைவி திருமதி ஹஜேந்தினி மைக்கல் கொலின், மகன்கள் ரொகான் ருக்சன், நிருஷான், ஆகியோருக்கும்.

இக்கவிதைகள் முகநூலில் வெளிவரத்தொடங்கியவுடனேயே இக்கவிதைகளை நூலாக வெளிக் கொணர்வது எனது பொறுப்பு என கூறியதுடன் நில்லாமல் இந் நூல் வெளியீட்டிற்கான நிதியை வழங்கிய எனது பாடசாலை கால இனிய நண்பன் **திரு.S.லிங்கேஷ்வரன்** (கனடா) அவர்களுக்கும் என் இதய நன்றியைத் தெரிவிப்பதோடு இக்கவி நூலை வாசிப்பவர்கள் உங்கள் பட்டாம் பூச்சியோடு சிறகடிக் கவும், முடியாதவர்கள் அந்த நினைவுகளில் மூழ்கித் திளைக்கவும் வாழ்த்துகிறேன்.

- மகுடம் **வி.மைக்கல் கொலின்**



என்

இனிய

பட்டாம்பூச்சிக்கு

நன்றி :

- திரு. **சாமித்தம்பி லிங்கேஷ்வரன் (கனடா)**



## 01

*வார்த்தைகளுக்குள்*
*அடங்கா கவிதையாய்*
*இன்னும்*
*கண்ணாமூச்சு*
*காட்டுகிறது*
*உன்*
*வெட்கமெனும்*
*பட்டாம் பூச்சி!*



## 02

*என் பிரபஞ்சமே*
*வனாந்தரங்களை*
*ஊடறுக்கும்*
*நதியைப்போல்*
*என்னை ஊடறுக்கும்*
*உன் பார்வை நதி!*
*காதல் என்ற ஒற்றைச் சொல்லை*
*கண்டு பிடித்தவள் நீ அல்லவா?*
*உன்னைப் பின் தொடர்வதே*
*என் புதிய சிலுவைப் பாதையாய்*
*கரங்களில் காதல் சிலுவையுடன்..*
*நான்.*



## 03

தேவதைகளின்
பாடல்களில்
பள்ளத்தாக்குகளின்
உப்பரிகையில்
காடுகளுடன் கதை பேசும்
தென்றலின் இசையில்
பனி படியும் பின்னிரவு நேரத்தின்
ஊமை இருளில்
சிறு தூறல் மேகத்தின்
மந்தகாசத்தில்
மழைக்கால வெள்ளத்தில்
காகித கப்பல் விடும்
குழந்தையின் புன்னகையில்
உன்னைத் தேடிக்கொண்டிருக்கும்
என் தேடலின் தாகம் என்றுமே தணியாது...



## 04

*என்றோ பெய்த மழை நீரை*
*சேமித்து வைக்கும்*
*நீரேந்தும் பிரதேசம் போல்*
*உன் நினைவென்னும்*
*மழை நீரை*
*என் இதயமெங்கும்*
*சேமித்து வைத்துள்ளேன்*
*உன்னை*
*ஒவ்வொரு முறை பார்க்கும் போதும்*
*பெய்கிறது*
*காதல்மழை*
*என் இதயக்குளம்*
*நிறைந்து*
*வழிய...*
*வழிய....*



## 05

*ஒரு மழை நாளில்*
*அருகிருந்தோம்*
*சாளரத்தின் வழி*
*உள்நுழைந்த*
*குளிர்க் காற்று*
*எம் மயிர்க்கால்களை*
*சில்லிட வைத்தன*
*காற்றில் அலைந்த*
*உன் கேசம்*
*என் முகத்தில் தவழ்ந்து*
*கவிதைகளாய் எழுதிக்கொண்டிருந்தது.*
*குளிரான நேரத்திலும்*
*உன் மூச்சுக்காற்று*
*அனலாயிருந்தது.*
*எம் கரங்களில்*
*சூடான*
*தேனீர்க் கோப்பை*
*அதில் ஆவியாக நீ*
*வெளியேறிக் கொண்டிருந்தாய்*
*நான் வியர்த்திருந்தேன்*
*ஆவி பிடிப்பது நல்லதாம்!*



## 06

*நேற்று பௌர்ணமி தினம்*
*வானில் முழு நிலவைக் காணாது*
*உலகெங்கும்*
*பர பரப்பு தொற்றிக்கொண்டது.*

*நிலவைத்தேடி*
*வல்லரசுகள் வானில் தேடுதல் வேட்டையை*
*தொடங்கின.*

*நிலவைத் திருடியது யார்?*
*உலகே திகைத்து நின்றது.*

*ஞானம் பெறுவதற்காய்*
*காத்திருந்தார் சித்தார்த்தர்.*

நாசா விஞ்ஞானிகள் மூவர்
எனதில்லம் வந்தனர்.
“நிலவைக் காணவில்லை
எங்கள் தேடலில்
தங்கள் காதல் மனைவி
தன் கண்களுக்குள் நிலவை
மறைத்து வைத்திருப்பது தெரிகின்றது” என்றனர்.



நீ விழிகளை விரித்தாய்
திகைத்தனர் விஞ்ஞானிகள்
“நாங்கள் நிலவைத்தான் தேடுகிறோம்
ஆனால் இங்கு சூரியன் அல்லவா தெரிகிறது” என
திரும்பிப் போயினர்.

என் காதலைச் சொன்ன நாளில்இருந்து
உன் விழிகளின் பிரகாசம் கண்டவன் நான்
“எப்படி கண்ணே
அவர்கள் ஏமாந்தார்கள்?” என்றேன்
“நீங்கள் முதல் முதலாய் தந்த முத்தத்தை
நினைத்தேன்
நிலவு சூரியனாகி விட்டது என்றாய்”

காதல் தேசத்தின்
வசந்த வாயிலாய்
உன் விழிகள்
“நிலவை விட்டுவிடு”
என்றேன்.
நீ சிரித்துக் கொண்டே
விழிகளைத் திறந்தாய்
வானில் முழு நிலவு தோன்றியது
சித்தார்த்தர்
ஞானம் பெற்றார்.



## 07

*மீண்டும்*
*தன் முயற்சியில்*
*சற்றும் மனந்தளரா*
*விக்கிரமாதித்தனைப் போல்*
*கவிதைகள் எழுதுகிறேன்*
*மீண்டும் மீண்டும்*
*முருங்கை மரம் தாவும்*
*வேதாளத்தைப்போல்*
*என் ஒவ்வொரு கவிதையும்*
*உன்னை நோக்கியே*
*பாய்கிறது..*

*உன் உடலெங்கும் ஆடைகளாய்*
*தொங்கிக் கொண்டிருக்கிறது*
*என் கவிதைகள்.*

*நான் மட்டுமே*
*வாசிப்பதற்கான*
*ஓர் காதல் கவிதைப் புத்தகமாய்*
*நீ*
*சிரித்துக்கொண்டிருக்கிறாயடி*
*என் இனிய வேதாளமே!*





## 08

உன்
ஆதாம் நான்
என் ஏவாள் நீ.

ஏதேன்
தோட்டத்தின்
விலக்கப்பட்ட கனியை
புசிப்போமா பெண்ணே?

காதல் ரசிப்பதும்
காதல் ருசிப்பதும்
கட்டுப்பாடுகளை
தகர்த்து வெளிக்கிளம்பும் போதுதானே?

வா
நீயும் நானும் சேர்ந்து
கடவுளுடன்
காதல்
கண்ணாமூச்சு விளையாடுவோம்.
எம் பாதங்களால்
சர்ப்பத்தை
நசிக்கியபடி..



## 09

*உன் பாதங்களில்*
*பூத்துக்கிடக்கிறது*
*என் காதல் பூ.*

*வீணையின் நாதங்களாய் காற்றின் சுவர்களில்*
*படிகிறது காதல் வாசம்.*

*தினமும்*
*தேவதைகள் நீருற்ற*
*உன் வீட்டு வாசலில்*
*வளர்ந்து நிற்கிறது துளசியாய்*
*நம் பேரன்பின் விதை.*

*ஆழ்கடலில்*
*மீன்களோடு மீன்களாய்*
*நீந்திக்கொண்டிருக்கிறேன்*
*நான்.*



நீல வானில்
பறவைகளோடு
பறவைகளாய்
பறந்து கொண்டிருக்கிறாய்
நீ.
காதல் கடவுளை
கண்டடையும் முயற்சியில்
எட்டுத்திக்கும்
ஒலிக்கும் நம் காதல் பாடல்!

உன் அன்பின் பரிசுத்தம்
கண்ணீரைப்
போன்றது!

என் அன்பின்
தூய்மை
பனித்துளி போன்றது!

இருவரும் ஒருநாள்
கடவுளைக்
கண்டோம்
காதல் கடவுளைக் கண்டோம்.!

நீ என்னிலும்
நான் உன்னிலும்.

இருவரும் இணைந்து
இந்த உலகத்தில்
புதியதொரு
மதத்தை உருவாக்குவோம்
ஆம்
காதல் மதம்
கடவுளாக
நாங்கள்!



## 10

பனைமரக் காட்டின்
ஒற்றைச் செம்மண் பாதையில்
மண்ணின் மணத்தோடு
காற்று வெளியெங்கும்
பிசு பிசுக்கும்
உன் கூந்தல் ஈரம்.

சொல்லாத கதையாய்
எழுதாத கவிதையாய்
எத்தனை எத்தனை
ரகசியங்கள்
புதைந்து கிடக்கிறது.?

தினம் தினம்
உன் விழிகள் நெய்யும்
மர்ம முடிச்சுகளை
அவிழ்த்துக் கொண்டிருக்கிறது
என் காதல்.

விழியின் இமை தகர்த்து
வழிந்தோடும் கண்ணீரில்
கசிந்துருகும்
இதயத்து காதலிடை
துளிர்த்தெழுந்த
என் பிரியம்
பற்றி எரிகிறது!



## 11

ஒரு பௌர்ணமி நள்ளிரவில்
கல்லடி பாலத்துக்கு கீழே
படகில் நாம்.

மீன்கள் பாடுவதை கேட்பதற்காய்
காத்திருந்தோம்.
எமக்கு மேலே கரும்பூதமாய்
கால்களை நீட்டிப் படுத்திருந்தது
இரும்புப் பாலம்.

உன் மழலைப் பேச்சைவிட
மீன்கள் பாடுவது
சங்கீதமாயிருக்குமா?
அப்படி இருந்தால்தான்
எனக்கென்ன வந்துவிடப் போகிறது?
ஆனாலும் உன்னுடன்
அந்த நள்ளிரவில்
ஆற்றில் அலைவதன் சுகம் அலாதியானது.

நீண்ட அந்த இரவின் தனிமையில்
படகையும்
காதலையும்
நகர்த்திக் கொண்டிருந்தாய் நீ.
ஒரு நிலவுடன் பயணித்துக் கொண்டிருந்தேன்
நான்.



இரவின் மௌனத்தில்
கடல் காற்றின் ஈரத்தில்
நனைந்திருந்தது
என் கவிதைகள்
நீ மெல்ல மெல்ல
ஊதி
காயவைத்த கவிதைகள்
மீண்டும் மீண்டும்
உன் மூச்சுக் காற்றுக்காய்
நனைந்து கொண்டேயிருந்தன.

விடியும்வரை
மீன்கள் பாடவேயில்லை.
ஆனால் மீன்கள்
அழுத சத்தம்
கேட்டது கண்ணே!

எம் மக்கள் நிலை கண்டு
மட்டக்களப்பு வாவி மீன்கள்
அழுத சத்தம் கேட்டது.

ஒரு கவிஞனாய்
அந்த அழுகையை
பதிவு செய்வேன்.

சந்தியாகால வேளை
படகில் இருந்து
மீண்டு வருகையில்
உன் கூடவே வந்தது
மீன்களின்
பாடல் சத்தம்.

(‘பௌர்ணமி காலங்களில் மட்டக்களப்பு வாவியில் மீன்கள் பாடுகின்றன’ என்ற கதையுண்டு. இதனால் மீன்பாடும் தேன்நாடு என்ற காரணப்பெயரும் மட்டக்களப்புக்குண்டு)





## 12

*மாமாங்கத் திருவிழா*
*தீர்த்தக் குளக்கட்டில்*
*அமர்ந்திருக்கிறாய் நீ.*
*தண்ணீரில் அமிழ்ந்திருக்கும்*
*உன் பாதங்களின்*
*வாசனை நுகர்வதற்காய்*
*குளத்து மீன்கள்*
*வந்து வந்து*
*முட்டி முட்டிச் செல்கின்றன.*
*வாசத்தின் கிறக்கத்தில்*
*சில மீன்கள்*
*உன் பாதங்களுக்கு கீழே நிரந்தரமாய்*
*குடியிருக்கவும் தொடங்கிவிட்டன.*



ஆலய பெருவாசல் திறந்து
வெளிவருகிறது சாமி.
என் சாமி நீ இன்னும்
குளக்கட்டிலேயே.

ஆலய வளவுக்குள்
பக்தர்கள் புடைசூழ
சாமியின் பயணம் ஆரம்பமாகியது.

குளக்கட்டில் நீயும் சாமியாய்
உன் கால்களைச் சுற்றி பக்தர்களாய்
குளத்து மீன்கள்.
தீர்த்தக்குளத்து
தாமரை போல்
உன் முகம் பிரகாசமாய்..
காற்றின் செவிகளெங்கும்
மந்திரங்கள்
நாதங்களாய் ஒலிக்க
சாமி மீண்டும்
ஆலய பிரவேசம்.

என் சாமி நீயும்
எழுந்து கொள்கிறாய்
இனி என்ன குளக்கட்டு
அது இனி
வெறும் கட்டு.

(மட்டக்களப்பு ஸ்ரீ மாமாங்கேஸ்வரர் ஆலயமும் தீர்த்தக்குளமும் இதிகாச, புராண வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடமாகும்)



## 13

ராவணதேசத்தில்
ஓர் நாள்
கோணேசர் பெருமலையின் உச்சத்தில் நாம்.

இயற்கையின்
எழில் கொஞ்சி விளையாடும்
கோணைநாதர் மலை முகடு
சூரிய தேவனின்
கத கதப்பில்
தக தகத்துக் கொண்டிருந்தது.

இருவரும் கரங்களை பிணைத்தபடி
மலையேறிக் கொண்டிருந்தோம்
வழியெங்கும்
புள்ளி மான்கள்
உன்னைக்கண்டு
'தம் இனமோ இவள்' என நினைத்தபடி
உன் பின்னால்
ஊர்வலம் வரத் தொடங்கின.

ராவணவெட்டின் முன்னே நாம்.
எம் மன்னவன் ராவணன்
தன் வாள்கொண்டு
மலைமீது
வெட்டிய வெட்டு



இரண்டாய் பிளந்திருக்கும்
பெரும்பாறைப் படிமம்
தொன்மங்களின்
கதையாடலாய்
தொடர்கிறது.
திருகோணமலை
மண்ணின்
அடையாளமாய்
தமிழ் இனத்தின்
வரலாறாய்
வாழ்கிறது.

ஆலயத்தின்
பின் புற மதிலில்
ஆயிரத்துக்கு மேலான தொட்டில்கள்
தொங்கவிடப் பட்டிருந்தன
ஒவ்வொரு தொட்டிலிலும்
எத்தனை எத்தனை கனவுகள்?
எத்தனை ஆயிரம் இதயங்கள்
இங்கே தொங்கிக்
கொண்டிருக்கிறதோ?

தொட்டில்களை கண்டவுடன்
நீ குழந்தையாகிறாய்.
என்னை விழிக்கும்
உன் பார்வையின் அர்த்தம் புரிகிறது.

ஏதோ இரண்டு
தொட்டில்களில்
கோணேசரும்
மாதுமையம்மாளுமாக
நாம் இருவரும் மாறிப்போனோம்!





## 14

*நீண்ட இரவொன்றின்*
*விழித்திருப்பு*
*எம்மை ஊடறுத்து பாய்ந்தது காலநதி.*

*தன் கரைகளை தானே அமைத்தபடி*
*அது தன்பாதையில் பயணிக்கத்தொடங்கியது*

*எங்கும் இருள்*
*நீ*
*மின்மினியாய் மாறிப்போனாய்*
*ஒரு வெற்றுத் தீப்பெட்டியுடன்*
*மின் மினிப் பிடிக்க அலையும் சிறுவனாய்*
*உன் பின்னே நான்.*



இரவின் சுவர்களில்
உன் வெளிச்ச
ஓவியங்களை வரைந்தபடி
பறந்து கொண்டிருந்தாய் நீ.
பொன்வண்டின் மினு மினுப்பும்
பளபளப்பும்
உன் உடலெங்கும்.

திடீரென்று
எங்கள் அறை
எகிப்திய அரண்மனையாய்
மாறிப்போனது
சிம்மாசனத்திலிருந்து
நீ
கிளியோபாட்ராவாய்
எழுந்து வந்தாய்.
எனக்குத் தெரியும்
நீ தொலமியின் சந்ததியில் வந்த ஏழு
கிளியோபாட்ராக்களில் ஒருத்தியல்ல
எட்டாவது கிளியோபாட்ரா நீ.

உன் கரங்களில்
நிறைய நட்சத்திரங்களை
வைத்திருந்தாய்
அவற்றை ஒவ்வொரு திசையாய்
நீ எறிந்த போது
எட்டுத்திசையெங்கும்
காதல்பூ
பூத்தது.

உன் கரங்களை பிடித்தபடி நான்
இரவுக்குள்
உறங்கப் போனேன்.



## 15

ஒரு முன்பனிக்காலத்தின்
பின்னிரவு நேரம்
இருவரும் பரமபத விளையாட்டில்
இணைந்திருந்தோம்.
உன் கையில்
தாயக்கட்டை
நீ
சிரித்தபடியே தாயத்தை உருட்டிவிட்டாய்.
தாயம் விழுந்த
புன்னகையுடன் நீ
நான் முதலாவது கட்டத்தில்
எம் இருவருக்குமான காயை வைக்கிறேன்
எம் காதல்
பரமபதம் தொடர்கிறது.

கட்டங்கள் கடந்து
நகர்கிறோம்
ஜாதி என்ற
முதல் பாம்பின்
தீண்டலில்
கீழ் இறங்குகின்றோம்.
நீ தாயக்கட்டையை உருட்டுகிறாய்
சமத்துவம் என்ற
ஏணியில் மேலேறுகிறோம்.

மதம் என்ற நாகம்
பதம் பார்க்கிறது
மீண்டும் கீழிறங்கி
அன்பு என்ற ஏணியால் மேலேறுகின்றோம்.

இடையே காத்திருந்த
அந்தஸ்து என்ற பாம்பும்
கொத்துகிறது
என்னுடன்
நீ கூடவே வரும்
தெம்புடன்
முயற்சி என்ற ஏணியின் மூலம்
மேலே செல்கிறோம் நாம்.



பல பாம்புகளின்
தீண்டலைக் கடந்து
ஏணிகளில் ஏறி
காடுகள் மலைகள்
எல்லாம் கடந்து
பூந்தோட்டங்கள்
வழி நடந்து
முடிவுப்புள்ளியைக்
கடந்து
காதல் பரம பதத்தில்
வெற்றிகொள்கிறோம்.

வெற்றிக்களிப்பில்
நீ தந்த முத்தம்
ஒரு பேரரசை
வெற்றி கொண்ட
திருப்தியில் நான்.

தாயக்கட்டை
எம்மைப் பார்த்து
சிரித்துக்கொண்டிருக்க
பரமபத பாம்புகள்
வெளியேறிக்கொண்டிருந்தன.





## 16

நள்ளிரவு தாண்டி
சில மணித்துளிகள்
கடந்த வேளை
உன் கரங்களை பிடித்தபடி
சிவனொளிபாத மலையில் ஏறிக்கொண்டிருந்தேன்.

சித்ரா பௌர்ணமி ஒளியில்
நீயும் ஒரு நிலவாக என்னுடன்.

எம்முடன் கூடவே மலை ஏறும்
பக்தர்கள்,
உல்லாச பயணிகள்,
பல மதங்கள்,
பல இனங்கள்,
அவரவர் மொழியில்
“எங்கள் தெய்வம் மேலே ஏறுவோம்”
உற்சாக வார்த்தைகள்



எங்கும் பக்தி மயமாய்
இருளைக்
கிழித்துக் கொண்டு
காற்றில் பரவுகிறது.
படிக்கட்டுக்கள்
எம்மை மேலேற்றிக் கொண்டிருக்கின்றன
இதமான குளிர்
தேகத்தை நனைக்கிறது
இருவரும்
ஒரு போர்வைக்குள்
உன் மூச்சுக்காற்றின் வெப்பம்
என் முகமெங்கும் பரவுகிறது.

இளைப்பாறும்
மேடைகளில்
அமர்கிறோம்
அந்த நேரத்தில்
கடையில் கிடைக்கும்
தேனீர் முழுதும்
மலையின்
மர வேர்களின் வாசம்
ஆனாலும் அந்நேர அமிர்தம்
அதுவல்லவா?

இதோ மலையின்
உச்சியில்
நாம் இருவரும்
அந்த ஒற்றைப்படிக்கட்டில்
ஒருவரை ஒருவர் உரசியபடியே
அந்த கடுங்குளிரையும்
தணிக்கும் வெப்பமாய்..
எம் உரசல்



உச்சிக்கோயிலின்
உள்ளே வந்தோம்
பாறையில் பதிந்த
பாதம் போன்ற பள்ளம்
சிவனின் பாதம்
புத்தரின் பாதம்
ஆதி மனிதன்
ஆதாமின் பாதம்
ஒவ்வொரு மதத்தினரும்
தங்கள் மத பெரியாரின் பாதமாக
நினைத்து வணங்க
நீயும் நானும்
சிரித்துக் கொண்டோம்.

ஒரு காலத்தில்
நீயும் நானும்
நிலவைப் பிடித்து
விளையாடும் ஆசையில்
இங்கு வந்த வேளை
நிலவைப்பிடித்து ஒழித்து வைக்க
நீ தோண்டிய பள்ளமல்லவா இது?
என்னைக்கண்டதும்
இதில் மறைக்க முடியாது
உன் கண்களுக்குள் மறைத்துக் கொண்டது
ஞாபகத்தில் வந்தது?

இது உன் பாதம் தோண்டிய பள்ளமல்லவா?
என் காதல் தேவதையின்
பாதம் பதிந்த மலைச்சிகரம் இது.
இனி இது
'காதல் மலை' என்றே அழைக்கப்படட்டும்.





## 17

எம் முன்னே விரிந்து கிடக்கிறது
சதுரங்க மேடை
வெள்ளைச் சதுரத்தின் ராஜாவாக நான்.
என் அருகில்
என்னைக்காக்கும்
என் இதயராணியாக நீ.

எம்மைச்சுற்றி
மந்திரிகள்
குதிரைப்படை வீரர்கள்
கோட்டை மதிற்சுவர்கள்
முன்னே
படைவீரர்கள்.



ராஜாவை காப்பாற்றும்
போட்டி ஆரம்பமாகிறது.
வாழ்க்கையிலும்
போட்டியிலும்
என்னைக்காக்கும்
முழு அதிகாரத்துடன்
ராணியாக நீ.

படைவீரர்
முன்னேற முடியும்.
குதிரைவீரர்
ஒரு கட்டம் பாய்ந்து
தாக்கவும் முடியும்
மந்திரிகள்
குறுக்காக திட்டமிட்டு
வெட்டவும் முடியும்
எல்லைகடந்து
நேர்கோட்டில்
கோட்டைச்சுவரால்
தாக்க முடியும்.

ஆனால் சர்வ வல்லமையுடன்
எந்த இடத்திலும்
குறுக்கும்
நெடுக்குமாக
எதிரணியின்
எந்தத்தளத்திலும்
தாக்கும் திறன்
ராணி உனக்குத் தானே?
நம் காதல் சதுரங்கத்தில்
ராஜாவின் பெயரால்
ராணியின் பலத்தை
தீர்மானிக்கும் விளையாட்டு.



*உன் ராஜா எனக்காக*
*எதிரியின் கோட்டையைத்*
*தகர்த்து*
*குதிரைப்படையை*
*அழித்தொழித்து*
*மந்திரிகளை*
*சிறைபிடித்து*
*அந் நாட்டு ராணிக்கு முன்னால்*
*நீ ராஜாவுக்கு வைத்த பொறி*
*முடிந்தது*
*காலத்துடனான*
*எம் காதல் சதுரங்கம்.*

*வெற்றிக்களிப்பில்*
*நீ என்னை பார்த்த பார்வையில்*
*சர்வாங்கமும் ஒடுங்கி*
*உன்னைச் சரணடைந்தேன்.*

*ஒன்று புரிந்தது*
*விளையாட்டில் மட்டுமல்ல*
*வாழ்க்கையிலும்*
*ராஜாவைக் காப்பது ராணிதான்.*
*இதை உணர்ந்தவர் வாழ்வு*
*என்றும் வெற்றிதான்!*



## 18

*ஒரு சந்தியாகால*
*கவிதையாய்*

*புல்லின் சிறு நுனியில்*
*பூத்திருக்கும்*
*பனித்துளியாய்*

*காலவெளியெங்கும்*
*நிறைந்திருக்கும்*
*என் கனவுகளாய்*

*புல்லாங்குழல்*
*வழியே வெளியேறும்*
*என்*
*மூச்சுக்காற்றின்*
*இசையாக*
*இந்த பிரபஞ்சமெங்கும் வியாபித்திருக்கிறாய்*
*நீ.*



## 19

*உன் நினைவுகளால் தினமும் நனைகிறேன்*
*காதல் கவிதைகளாய்*
*கணமும் வரைகிறேன்.*

*நீ*
*விழிகளைத் திறக்கும் போதெல்லாம்*
*வானவில் தோன்றி மறைகிறது!*
*எப்போது பெய்யும் காதல் மழை என*
*மனசு கிடந்து துடிக்கிறது!*

*காதலில் பிறந்து*
*காதலில் வளர்ந்து*
*காதலாய் வாழ்பவன்*
*பிறந்ததன்*
*அர்த்தம் தெரிகிறது.*

*என் போதிமரம்*
*நீ தான் என*
*புரிகிறது!*



## 20

*நீந்திக் கொண்டிருக்கிறோம்*
*காலமெனும் மீன் தொட்டியில்*
*வாஸ்து மீன்களாய்.*

*ஒவ்வொரு*
*நாளும் விடிகிறது*
*உனக்கும்*
*எனக்குமான*
*காதலைச் சுமந்தபடி.*

*நீ*
*தடவிச் சென்ற*
*ரோஜாப்*
*பூ விதழ்களில்*
*வழிகிறது*
*காதலெனும்*
*தேன் துளிகள்.*
*உன்*
*நேசமெனும்*
*சுவாசத்தில்*
*திகழ திகழ*
*உயிர்க்கிறது*
*என் உயிர்ப்பூ !*



## 21

கரைந்து போகையில்
காற்றெங்கும்
மணம் பரப்பும் கற்பூரமாய்
உன்னை நினைக்கையில்
மனசெல்லாம்
கற்பூரவாசனை.

சிறுவயதில்
'கிச்சுக் கிச்சுத் தாம்பலம்'
'கிய்யாக் கிய்யாத் தாம்பலம்' விளையாட்டில்
மணலில் புதைத்து விளையாடுவோம்
இப்போ உன்னில்
என்னையும்
என்னில் உன்னையும்
மறைத்து விளையாடுகிறோம்.

நீ
சொன்னதும்
ஏழு கடல்தாண்டி
ஏழு மலை தாண்டியிருக்கும்
மரத்தின் பொந்தில்
இருக்கும்
தங்கக்கிளியைக்
கொண்டுவந்தேன்.
'உன் உயிர் அதில்தான்' என்றாய்
ஆனால்
என் உயிர் நீதான் என்பதை இன்னும்
அறியாமலேயே..
நீ.



## 22

*தீராத வேட்கையுடன்*
*தாகம் கொண்டலையும்*
*காதல் காட்டின் சிறுத்தை*
*நான்.*
*வற்றாத நதியாக*
*வனாந்தரங்களெங்கும் பாயும்*
*நீரூற்றாய்*
*நீ.*
*எம் சந்திப்பு*
*நிகழ்ந்திருக்காவிடில்*
*இந்த பிரபஞ்சத்தின்*
*நேசப் பூ*
*பூத்திருக்கவே முடியாது பெண்ணே!.*



## 23

*காவிரி பூம்பட்டணத்தின்*
*அலை தவழும்*
*புகார் கடற்கரை மணலில்*
*அலைகளுடன் அலையாக*
*ஒரு தேவதை.*

*என்*
*யவனராணி*
*மயங்கிக் கிடந்தாள்.*

*தொட்டணைத்து*
*தூக்கிவந்தேன்.*
*ஒரு மலர் மாலையாக*
*என் புஜங்களின் மேல் அவள்.*

*சோழர்படை*
*உப தலைவன் என் கரங்களில்*
*யவனத்தின் ராணி.*
*சோழ சாம்ராஜ்சியத்தின்*
*சரித்திரத்தை மட்டுமல்ல*
*என் சரித்திரத்தையும்*
*மாற்றப்போகிறவள்*
*என் மடிமீது.*

*என் வீட்டு மஞ்சத்தில்*
*ஒரு தேவதை*
*உணர்வற்றுக் கிடந்தது.*

*அவள் செம் பஞ்சு கால்களை*
*தேய்த்து விட்டேன்*
*ரோஜா மலர்ப்போன்ற*
*உள்ளங்கையை*
*மெல்ல அழுத்தி விட்டேன்*
*ஒரு தங்கச்சிலை*
*என் முன்னே எழுந்து நின்றது*
*எப்படியடி இந்த மாற்றம்*
*என் இதய ராணி*
*யவன தேசத்தின் ராஜகுமாரியா?*



*வாசலில் யாரது*
*கதவைத்தட்டுவது*
*ராணியைத் தேடி*
*யவனர் படைத்தளபதி*
*டைபீரியஷ் வந்தானோ?*
*எங்கே என் வாள்?*

*என் நெற்றியில் தவழும்*
*உன்கரத்தின் வளையோசையில்*
*கனவிலிருந்து*
*விழித்துக்கொள்கிறேன்.*

*என் மார்பிலிருந்து நழுவுகிறது*
*இரவு நான் வாசித்த*
*சாண்டில்யனின்*
*யவனராணி.*

*அருகே*
*தேனீர்க்கோப்பையுடன்*
*என் பிரிய ராஜகுமாரியாக*
*நீ புன்னகைத்துக்*
*கொண்டிருந்தாய்.*



## 24

*உலக அதிசயத்தோடு*
*கரம் கோர்த்து*
*உலக அதிசயத்தின் மேலே ஏறிக்கொண்டிருந்தேன்.*

*சிம்மத்தின் வாய்க்குள் நுழைந்து*
*எம் மன்னவன்*
*ராவண மகாராஜா ஆண்ட*
*மலைமீது*
*ஏறுகிறோம்.*

*சிகிரியா மலை மீது*
*எம் பாதங்கள்*
*பதிகிறது.*

*ஒரு பேரரசின்*
*சிதிலங்கள் மலை மீது*
*காட்சிகளாய்..*

என்றுமே வற்றாத
நீர்த்தடாகம்
ஆனால் எவ்வளவு மழை
பெய்தாலும்
நிறைந்து வழியாத அதிசயம்.

எம் மாமன்னவனின்
சிம்மாசனம்
அவரைப்போலவே
பிரமாண்டமாய்.
புஸ்பக விமானத்தின்
இறங்கு தரை
இன்னும் பசுமையாக.

ஒரு பாறையின்மீது
தனி சாம்ராஜ்சியமா?
உலகத்தீரே
உலகத்தீரே
எதை எதையோ
உலக அதிசயம்
என்கிறீர்கள்
இதுவல்லவா அதிசயம்!

'இதுதான் இரண்டாவது
உலக அதிசயம்'
என்கிறேன்
'முதலாவது அதிசயம் எது?'
என்கிறாய்
'அது நீதான்
என்கிறேன்.'
வெட்கத்தின் கரங்கள்
உன் முகம் மூட
சொர்க்கத்தின்
கதவுகள் மெல்லத் திறக்கின்றன.



சிகிரியாவின்
ஓவியங்களை
ரசித்தபடியே
இறங்கிவரும்
கவிஞர் கேணிப்பித்தன்
தன்மகன் ஓவியர் அருளுடன்..

எங்கள் பேச்சில்
சரித்திரமும்
இலக்கியமும்
எட்டிப்பார்க்க
உன் விழிகள்
காதலுடன்
கட்டிப்போடுகிறது.

என்றும் அழியா
சிகிரியா
ஓவியக்கலவையின்
மர்மம்போலவே
தொடரும் அதன்
வரலாறும்..
பல கதைகள் பேசியது.

எம் நினைவுகளை
மலையில் உலவ விட்டு
நாம் இறங்குகிறோம்.

மலையாக ஒரு அதிசயம்
மண்ணில் கிடக்கிறது
அலையாக
காதல் அலையாக
ஓர் அதிசயம்
என்னுடன் கூட வருகிறது.






## 25

கீழடியில்
தமிழர் தம்
தாய் மடியில்
உறங்கிக் கிடக்கிறோம்.

பாறையை பிளந்து
இறங்குகிறது
ஓர் அலவாங்கு.

பல்லாயிரக்
கணக்கான வருடங்களின்
உறக்கம் கலைகிறது.

வைகை ஆற்றங்கரையில்
சங்ககாலம் தாண்டிய
நாகரீகம் சிரித்துக் கொண்டிருந்தது.

ஆதிச்சநல்லூர்
தமிழர் தம்
ஆதிக்க நல்லூராய்
ஆரம்பித்து
மீண்டும் தமிழின் ஆதிக்கம்
கொடுமணல்வரை
தொடர்கிறது.

தொன்மங்களின்
நீட்சியாய்
கீழடியில்
உறங்கிக் கிடந்த
முதல் தமிழர் காலடி
உனதும் எனதுமாய்.

தமிழின் நகர்ப்புற நாகரீகத்தின்
முதல் அடையாளம்
உன் காதணிதான் கண்ணே.

உலகிற்கு
காதலைத் தந்த
மூத்தகுடி
நாங்கள்தானடி.

உலகின்
முதல் தமிழ் பெண் நீ தானோ?

புதிய சரித்திரத்தின்
பூபாளம் கேட்கிறது.

ஆரியத்திற்கு
முன்னரான
வரலாறு
வாழ்கிறது.



*காதல் சிறகுகள்*
*உதிர உதிர*
*காதலித்துக் கிடந்தோம்*
*அன்று நாம்*
*விளையாடிய*
*பொருட்கள் இன்று எம்*
*சரித்திரம் பேசுகிறது.*



*என் தொன்மங்களின்*
*காதலே வா*
*எம் காதலுக்கூடாக*
*எம் இனத்தின்*
*வரலாற்றைச் சொல்வோம்.*
*வரலாறாய்*
*வாழ்வோம்!*

*முள்ளிவாய்க்காலில்*
*வீழ்ந்தாலும்*
*கீழடியில் எழுந்து நிற்போம்!*

நன்றி : **"விடியல்" - புதுவை**





## 26

கனவுகளோடும்
கவிதைகளோடும்
பேசியபடியே
ஜமுனை ஆற்றங்கரையோரம்
உலா வருகிறோம்.

நீ அருகில் வருவது
மழை வருவதற்கு சமமானதே
மழையில் நனைவதும்
மழையை அளைவதும்
எனக்கும் பிடித்தமானதே..



பௌர்ணமி பின்னிரவுப்
பொழுதொன்றில்
நிலாவின் ஒளிக்கதிர்கள்
வெளிச்ச மழை பொழிய
தாஜ்மகாலைப்
பார்க்கும் உன் ஆசை.

குளிர்நிலவின்
தீண்டலில்
ஒரு காதல் காவியம்
கண் முன்னே!

விழியெங்கும்
ஆசை ஆசையாய்
தாஜ்மகாலின் அழகில் திளைத்து
என் மார்பில் சாய்கிறாய்.

எம்மைச்சுற்றி
சின்னஞ்சிறு
மின் மினிகள்
ஒளி வெள்ளம் பாய்ச்ச
உயிருள்ள தாஜ்மகாலாய் நீ
என் உள்ளம்
நுழைகிறாய்.

காதலெனும் மாய ஊஞ்சலில்
நிஜமாகவே ஆடுகிறோம்
நாம் இருவரும்.

ஆட்டத்தின் நடுவே நீ
புன்னகைத்தபடியே
சொல்கிறாய்
"தாஜ்மகாலின் ஒவ்வொரு தூணிலும்
மும்தாஜ் சிரிப்பது எனக்கு கேட்கிறது"

என்கிறாய்.
நான் சிரித்துக்
கொள்கிறேன்.
"ஏன் சிரிக்கிறீர்கள்?
கால மண்ணில்
காதலின் சின்னம் தெரியவில்லையா?"
என்கிறாய்.



உன் கரங்களைப்
பற்றுகிறேன்
"இது சலவைக்கல்லால் கட்டப்பட்டது
உனக்கு நான் கட்டிய
தாஜ்மகாலை காட்டவா? "
என்கிறேன்.
"எங்கே?" என்கிறாய்

உன்னை அணைத்தபடியே
என் இதயத்துள்
அழைத்துச் செல்கிறேன்.

ஆழக்கடல் கடந்து
நனவுமனம்
நனவிலி மனம் தாண்டி
உள்ளே உள்ளே செல்கிறோம்.
தாஹ்மகாலை விட
பிரமாண்டமான எனது
காதல் மாளிகையைக் காண்கிறாய்
உள் நுழைந்ததும்
ஒவ்வொரு தூண்களாய்
தொட்டுத் தடவுகிறாய்.

"இதென்ன இவ்வளவு
மென்மையாக இருக்கிறதே என்கிறாய்?"



“அது வெறும் கல்லால் கட்டியது
இது என் இதயத்தின்
அத்தனை இழையங்களாலும்
கட்டியது” என்கிறேன்.
கண்களில் கண்ணீருடன்
என் கழுத்தைச் சுற்றி
தட்டாமாலை ஆடியபடியே

“அன்பே!
ஷாஜகானின் காதல் மாளிகை
ரசிப்பதற்கு
உங்கள் மாளிகை
நான் வசிப்பதற்கு” என்கிறாய்.

காதலிக்கும்
ஒவ்வொரு ஆண்களும் தமது காதலிகளுக்கு
இதயத்தில் மாளிகை
கட்டிக்கொண்டுதானிருக்கின்றனர்
ஆனால் அதனை
அவர்களுக்கு
வெளிக்காட்டத்தான்
தெரிவதில்லை...





## 27

*காவிரி ஆற்றின் தென்கரையில்*
*ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாய்*
*தமிழர்தம் புகழ் பரப்பும்*
*தஞ்சைப் பெருங்கோயிலின்*
*கேரளாந்தகன் நுழைவாயில் கடந்து*
*ராஜராஜன்*
*திருவாயிலில் நீயும் நானும்..*

*முதலாம் ராஜராஜ சோழன்*
*புத்திரியே!*

*பதினைந்து தளங்கள் கொண்ட*
*பிரமாண்ட கல் கோயில்*
*எம் காதலைப்போல்*
*நிமிர்ந்தே நிற்கிறது.*



நீண்ட நெடுங்கால பயணம்.
சரித்திரங்களுக்கூடாக
சாதனைகளுக்கூடாக
எம் காதலை பாடிப்பாடி
திளைத்திருக்கும் மனசு.

நாம்
நீந்தித் திரிந்த
வெண்ணாறும்
வடவாறும்
பாய்ந்த பூமியிது.

ஆதிக்குடிகளின்
அடையாளம்
எம் காதல்.

வரலாறுகள் தோறும்
எம்மைக் கடத்திச் செல்கிறது
காதல் தேவதை.

காலமெனும் சகுனியின்
கரங்களில் பகடையாய் நாம்.

அன்றைய நாள்
ராஜராஜசோழன்
பிறந்தநாள் விழா
ஆலய திருவிழாவில்
இதுவும் ஒரு பெருவிழா.

நந்தி மண்டபம் கடந்து
துவாரபாலகர் சிலைகளை ரசித்தபடி
உள் நுழைகிறோம்.

கருவறைக்குள்
உலகின் மிகப்பெரிய லிங்கம்
ஆவுடையார் மீது
கம்பீரமாய் நிற்கிறது.



உலகின் மிக உயரமான விமானம்
அதன் உச்சியில்
மிகப்பிரமாண்ட பிரம்ம மந்திரக்கல்.

மாமன்னன்
ராஜராஜனின்
தலைமைத் தச்சன்
குஞ்சரமல்லனின்
நிலத் தேர்வு அபாரம்.

“பைசா கோபுரமே
சாயும்போது
தஞ்சைப் பெருங்கோயில் நிமிர்ந்தே நிற்பது
தமிழர் கட்டடக்கலையின் உச்சம்” என்கிறாய்

பெருங்கோயில்
வரலாற்றில்
வாழ்வதற்கும்
வரலாறாய் வாழ்வதற்கும்
காரணம் உண்டு

“கோயில் என்பது
சைவர்களுக்கு
தில்லை பொன்னம்பலத்தையும்
வைஷ்ணவர்களுக்குத் திருவரங்கத்தையும்
குறிப்பது போல்
இது பொதுமக்கள் கோயில்.

இந்தக் கோயிலின்
கற்சுவர்களில்
இக்கோயிலுக்கு நிதி அளித்த
ஒவ்வொருவர் பெயரும்
பதியப்பட்டுள்ளது” என்கிறேன்.



கொலுசுச் சத்தம்
காற்றில் அதிர
என் காதுக்குள்
நீ ஓதும் மந்திரம்.

“உங்கள் வேண்டுதல் என்ன? “

“கட்டடக்கலை
சிற்பக்கலை
ஓவியக்கலை
மூன்றினதும் சங்கமமாய்
திகழும்
தஞ்சைப் பெரியகோயிலைப்போல்
காலத்துக்கும் நம்காதல் வாழவேண்டும்
அதை இவ்வுலகம்
வாழ்த்த வேண்டும்.”

‘அப்படியே ஆகட்டும்’
வானம் பிளவுண்டு
ஆதிகுரல் ஒலித்தது
காதல் தேவதைகள்
மலர்களைத் தூவ
எம் அருகில் நின்றார்
மாமன்னன் ராஜராஜன்.



## 28

வலசை போகும்
பறவைகள்
தங்கள் பயணத்திற்காய்
அதிகம் உண்டு
கொழுப்பைச் சேமிப்பதுபோல்
பாலைவன ஒட்டகங்கள்
அதிக நீரைக்குடித்து இரப்பையையும்
கொழுப்பால்
தமது திமிலையும்
நிரப்புவதுபோல்
உன் நினைவுகளை
என் இதயமெங்கும்
சேமித்து வைத்திருக்கிறேன்.
ஆனாலும் என்ன
என் இதயமெனும் பாதுகாப்பு பெட்டகத்தின்
கடவுச்சொல் உன் கண்கள்தானே
என் கண்மணி.. ?

நீ
செலவழிப்பதும்
நான் சேமிப்பதும்
இதுவும் ஒரு காதல்
கண்ணாமூச்சிதானோ?

*மரங்கொத்திப் பறவையாய்*
*என் மனங் கொத்திப் போறவளே..*



*உன் மௌனத்தின்*
*பேரோசை வரையும்*
*சாயங்கால*
*கவிதைகளில்*
*இந்த கொரோனா காலத்தின்*
*அடர்த்தி தெரியாமலாகி விடுகிறது பெண்ணே!*

*நாம் இருவரும்*
*இணைந்து எழுதும் கவிதைகளில்*
*வார்த்தைகள்*
*காணாமல் போய்விடுகின்றன*
*இரவு முழுவதும்*
*வார்த்தைகளைத் தேடித் தேடியே*
*காலை புலர்ந்து விடுகிறது.*
*ஆனாலும்*
*கவிதைகளை எழுதிக்கொண்டே தான்*
*இருக்கிறோம்.*

*உன் இமைகளில்*
*தொங்குகிறது*
*நம் இனிமைப் பொழுதுகள்.*

*விடிகாலைச் சூரியன்*
*மண்ணை முத்தமிடும்*
*அக் கணப்பொழுதில்*
*ஏதோ ஓர் புல்லின் நுனியிலிருந்து*
*வழியும் பனித்துளியின்*
*ஓசையில்*
*நம் வசந்தத்தின்*
*புதிய நாள்*
*உதயமாகிறது.*



*மீன் மகள் பாடத்தொடங்கிய*
*அந்த விடிகாலைப்*
*பொழுதில்தானே*
*உன்னை*
*முதன் முதலாய்*
*முத்தமிட்டேன்.*
*வாவிக்கரை முத்தங்கள்*
*நரைத்துப் போகா*
*நுரை ததும்பும்*
*ஞாபகங்கள்.*

*மார்கழியின்*
*பனிப்புலர்வில்*
*ஊடல் என்பது*
*தேடல் என்றானது.*

*பிரபஞ்சத்தின்*
*மொத்த ஈர்ப்பு விசையும்*
*உன் விழிகளில் தானா?*
*எங்கு போனாலும்*
*என்னை இழுத்து விடுகிறாய்!*

*காந்தங்களில் நாம்*
*ஒவ்வாமுனைகளாய்*
*எப்போதும்*
*ஒட்டிக் கொள்கிறோம்.*

*எந்த (மனித)க் கிருமியையும்*
*எதிர்த்து நின்றே*
*வாழ்க்கையை*
*வாழ்ந்தே*
*கழிப்போம் வா!*



## 29

மீண்டும்
ராவண தேசத்தில்
ஆடி அமாவாசை காலைப் பொழுதில்
வரலாற்றுப் புகழும்
தலபுராணமும்
இலக்கியப் பெருமையும் கொண்ட
திருக்கரைசையம்பதி
அகஸ்தியர் ஸ்தாபனம் நோக்கி
பயணமாகிறோம்.
மூதூர்பிரதேசத்தின்
பழம்பெரும் கிராமமான
கங்குவேலியிலிருந்து சில காத தூரத்தில்...

மலைநாட்டில் ஆரம்பித்து
திருமலையில்
சங்கமிக்கும்
மாவலியாளின் கரைதனிலே
இரண்டாயிரமாண்டுகள்
பழமை வாய்ந்த
அசையாலிங்கமாக விருக்கும்
அடம்பலிங்கம்
ஆதிசிவன் ஆலயத்தின்
முன்னே நாம்.



சங்க காலம் தாண்டிய
தமிழர் முது நாகரீகம்
கீழடியில் ஆரம்பம்.
சிந்து சமவெளி
நாகரீகம் பேசும்
மொகஞ்சதாரோ
ஹரப்பா எனத் தொடர

ஈழத் தமிழர் கீழடி
தமிழர் தம் தொன்மை பேசும்
திருக்கரைசைதனிலே

நூற்றியெட்டு
சிவாலயங்கள்
கொண்டதனால்
திருமலையில் மட்டுமே அமைந்தது
சனீஸ்வரனாலயம்

பல சிவாலயங்களின்
இணைப்பில்
எழுந்தது
அகஸ்தியர் ஸ்தாபனம்.

நீண்ட நெடும்பயணம்
பயணித்த கால்கள்



*களைப்புடன் கண் அயர*
*மாவலி ஆற்றின்*
*படித்துறை மீதமர்ந்து*
*உன் பாதங்களை*
*வருடிவிடுகிறேன்.*

*முற்றிய நுங்கை கோதி*
*எடுத்தது போன்ற*
*அதே பளபளப்பு*
*அதே வளவளப்பு*
*உன் கால் விரல்களில் இருந்து*
*என் கை விரல்கள்*
*வழுக்கிச் செல்கின்றன.*

*வழியெங்கும்*
*சிதறிய சிதிலங்களாய்*
*வட்டக்கற்களும்*
*கடையப்பட்ட*
*கற்றூண்களும்*
*சிறிதும் பெரிதுமாக*
*எல்லாம் கடந்து*
*உலகின் இரண்டாவது*
*மருத்துவ பல்கலைக்கழகம்*
*அமைந்திருந்த*
*அகத்தியர் ஸதாபன*
*வாயிலில் நாம்.*

*கருங்கல்லில் பொறிக்கப்பட்ட*
*அகத்திய முனியின்*
*பாதங்களை தொட்டு*
*வணங்குகிறாய்.*
*தொன்மத்தின் காட்சிகள்*
*விரிகின்றன.*

தனது பாதங்களில் இருந்து
எழுந்துவருகிறார் அகத்தியமுனி



எங்கும் மங்கள நாதம் முழங்க
இரண்டாயிரம்
வருடங்களுக்குப்பின்னால்
காலம் சுழல
தான் கொண்டுவந்து
தென்கைலாய திருக்கரைசையில்
பிரதிஷ்டை செய்த
சிவனின் மணக்கோலம்
கண்ட முனி வருகிறார்.

நாமும்
தமிழோடு இணைந்தே நடந்தோம்
வாசல்தோறும்
மருத்துவ மாணவர்கள்
கைகளில் மூலிகைச்செடிகளுடன்
விழுந்து பணிந்தனர்.

உருவம் சிறியதானாலும்
நிமிர்ந்தே நின்றது தமிழ்
முறிந்தாலும்
வளையாது எமது தமிழ்.

தமிழும்
ஃபீனிக்ஸ் பறவையும் ஒன்று
இரண்டுமே
எரித்தாலும் சாம்பலில் இருந்து உயிர்க்கும்.
காலத்தில் ஃபீனிக்ஸ் பறவை
தமிழுடன் ஐக்கியமாகி விட்ட அதிசயம்
யார் அறிவார்?

காலாதி காலம்
என்னுடன் கலந்தவள் நீ
இருவரும்
அகத்திய முனியின்
மாணாக்கர்களாய்
பாடம்கேட்க
வில்வமரத்தின் கீழே அமர்ந்திருக்கிறோம்.



காவிரியை அடைத்த
கமண்டலத்தை சுமந்தபடி
முனிவர்.
இலக்கணம்,
இலக்கியம்,
அரசியல், வரலாறு பாடங்கள் தொடர்கிறது.

கனவுகளின்
காலம் காலாவதியாகி
நனவுக்குள் நாம் இறங்கும் நேரம்.

“என்றும் தமிழ் வாழுமா ஐயா?”
என்கிறேன் நான்

“வாழும் வாழும்
நான் போனாலும்
வருவான்
இந்த மண்ணில்
வ.அ.இ.
ஆள்வான்
இலக்கிய உலகை!”
என்ற முனி
மறைந்தே போனார்.



## 30

*மூங்கில் விதைக்கு*
*அதிகமதிகமாய்*
*நீருற்றினாலும்*
*ஐந்தாறு வருடங்களுக்குப் பின்னரே*
*முளை வெளியே தெரியும்*
*அந்தக் காலங்களில்*
*அது மண்ணுக்குள்*
*தன் வேர்களை ஆழ வேரூன்றியிருக்கும்.*
*முளை வந்து ஆறே மாதங்களில்*
*அறுபதடிக்கு மேலே வளரும்*
*மூங்கிலைப்போல்*
*என் மனமெங்கும்*
*ஆழ வேரூன்றி*
*உன் நினைவு மூங்கிலும்*
*உயர்ந்து வளர்ந்து நிற்குதடி.*

*வனாந்தரமெங்கும்*
*அலைந்த களைப்பில்*
*கூடேறுது ஒரு பறவை.*

*கண் சிமிட்டும்*
*நேரத்தில்*
*கடலில் பாய்ந்திறங்கி*
*மேலெழும்*
*மீன் கொத்திபோல*
*என் மனமீனை*
*கொத்தியெழும்*
*உன் நினைவுப் பறவை.*

இடியாய்
என்னுள்
இறங்குகிறாய்
மறுகனமே
மின்னல் கவியாய்
நீ கிறங்குகிறாய்.



மலைக்காடுகளை
தலை கோதும்
வானத்து மேகங்களைப்போல்
உன் சிணுங்கல்களின்
சிகரங்களை
தலை கோதும்
என் கவிதைக் கரங்கள்.

நீ
கண்களை மூடிக்கொள்கிறாய்
நான் கனவு காண்கிறேன்.

என்னவள்
என்பதிலும்
ஓர் கர்வம் ஒளிந்துதானிருக்கிறது..
மனசு முழுக்க
ஒரு வாசம் பூத்துத்தானிருக்கிறது.

கால நதிமீது
பயணிக்கும்
எம் காதல் படகு
கரைசேருமா
கவி பாடுமா?



## 31

*ஓர் குடையின் கீழ்*
*இரு பட்டாம்பூச்சிகளாய்*
*இருவரும் நனைந்து கொண்டிருந்தோம்*
*காதல் மழையில்.*

*குடைக்கம்பியின் வழியே வழியும்*
*நீர்த்தாரகைகள்*
*உன் நிலா முகத்தை*
*முத்தமிட்டு*
*கன்னக்குழிகளில்*
*வழிகிறது.*

*வழியும் துளிகளை*
*கரத்தினில் ஏந்தி*
*தீர்த்தமாய்*
*காதலின் தீர்த்தமாய்*
*அருந்துகிறேன்.*

சக்கரவாகபட்சி
பனித்துளிகளைப்
பருகி
உயிர்வாழ்வதைப்போல்
உன் நினைவுகளைத்தின்றே
நான் உயிர் வாழ்கிறேன்.



பூத்துக் கிடக்கும்
பொன்னாவரைப்
பூக்கள்
உன்னைக்கண்டதும்
தங்கள் இளவரசியை கண்ட திருப்தியில்
உதிரத்தொடங்குகின்றன.

பூக்களின் மீது
பூ ஒன்று
நடந்து செல்வதைப்போல்
மஞ்சள் பூக்களின் மீது
பாதம் பதிக்கிறாய்.

அலைகளோடு
அலைகள் வந்து
மோதிச்செல்கின்றன.

உன் பேரன்பு
நதியெனப் பாய்கிறது.
நான் நீந்திக்கொண்டிருக்கிறேன்.
நதிநீரும் வற்றாது
என் நீச்சலும் நிற்காது
காலாதி காலத்துக்கும்
நதி பாயும் ஓசையும்
நீச்சல் சத்தமும்
ஒலித்துக் கொண்டேதானிருக்கும்.

*பின்னிரவுப் பொழுதொன்றில்*
*என் பிடறி மயிர் அளைந்து*
*நீ தந்த முத்தத்தின்*
*சத்தம் இன்னும் ஓயவில்லை.*



*முத்தத்திற்கும்*
*சத்தத்திற்கும்*
*இடையே*
*மறுகிக்கிடக்கிறது மனசு*
*இன்னுமொரு முத்தத்திற்காய்.*

*இமைப்பதும்*
*இதயம் துடிப்பதும்*
*கணப்பொழுதே*
*நான் படைப்பதும்*
*நீ ரசிப்பதும்*
*அநாதி காலமாய்.*





## 32

நீண்ட நெடுங்கடலின் நடுவே
தாகத்துடன்
மலர் தேடி அலையும்
பட்டாம் பூச்சியாய் நான்.

வீணையின் இரு நரம்புகளுக்கிடையே
வாழ்கிறது
நம் காதல்.

அடர் வனத்தின்
மையத்தில் இருந்து
எழுந்து வருகிறது
உனது பாடல்.
உன் பாடலுக்கான இசையை மீட்டுகிறேன்
பாடல் தொடர்கிறது.

எங்கிருந்தோ வந்த தேவதைகள்
பாடலுக்கேற்ற நடனமாடுகின்றனர்.
தேவதூதர்கள்
மதுக்கிண்ணங்களை
நிரப்பிக்கொண்டிருக்கின்றனர்
எல்லோரும் உன் பாடலின்
போதையில் மயங்கித் திளைத்தபடி
மதுக்கிண்ணங்களை
உருட்டிக் கொண்டிருக்க



என்னையும் உன்னையும்
கரங்களைப்
பிடித்தபடி இரண்டு தேவதைகள்
அழைத்துச் சென்று
ஒரு விண்கலத்தில் ஏற்றிவிடுகின்றன
*தியான்வென்1
சொர்க்கத்திற்கான கேள்விகளையும்
எம்மையும் சுமந்தபடி
செவ்வாய்க் கிரகத்தில் வெற்றிகரமாக
தரையிறங்குகிறது.
சீனப்பெருஞ்சுவரில் நின்றபடி
குழந்தைகள்
வாழ்த்துக் கொடிகளை
அசைப்பது தெரிகிறது.
இனி என்ன நாம்
செவ்வாய்க் கிரகத்தில்
குடியேறவேண்டியதுதான்?

இரவினை மிதித்து
நடக்கும் உன் பாதக்கொலுசின்
சப்தம் மௌனம் பூசியது
காலத்தின் சுவர்களில்

இப்போதெல்லாம்
நான் சொற்களைக்கூட
இடைவெளி இல்லாமலேயே
எழுதுகிறேன்
என் எழுத்தெங்கும்
உயிர் வாழ்பவள் நீ அல்லவா?
புள்ளி வைக்க அழுத்தவும்
புலன் கேட்குதில்லை
பேனையின் குமிழ்முனை
அழுத்தி
உனக்கு காயம்வந்துவிடக்கூடாதே என்ற
கவனம்தான்
"ஆனாலும் நீங்கள்
ரொம்பத்தான் கொண்டாடுகிறீர்கள்"
என்கிறாய்

"ஓர் ஆண்
கொண்டாடுவதற்கு
ஒரு பெண்ணும்
ஒரு பெண்ணுக்கு
கொண்டாடப்படுவதற்கு
ஓர் ஆணும் கிடைத்து விட்டால்
இந்த பிரபஞ்சமெங்கும்
காதல் நிறைந்து வழியாதோ..?

வழியட்டுமே காதல்....!



(*தியான்வென்1 - செவ்வாய் கிரக ஆய்வுக்காக சீனா ஏவிய முதல் விண்கலம் வெற்றிகரமாக செவ்வாயில் தரையிறங்கியது)



## 33

ஆகாயம் பிளவுண்டு
பேரோசையாய்
வானத்திலிருந்து இறங்கி வருகிறது
உன் பெயர்.

அதுவே
மண்ணில்
“காதல்” என்று
அழைக்கப்படலாயிற்று.

ஒரு சந்தியாகால
பின்னிரவில்
நட்சத்திரங்களை
எண்ணிக் கொண்டிருக்கிறேன்
பின்னால் வந்து
என் காது மடல் கடித்து
“என்ன கவிஞரே?” என்கிறாய்.

“உனக்காக
நான் கட்டப்போகும்
நட்சத்திர மாளிகைக்கு
இந்த வானத்து நட்சத்திரங்கள்
போதுமா என
ஒரு கணக்கெடுப்பு நடத்துகிறேன்”
என்கிறேன்.

ஆயிரம் நட்சத்திரங்களின்
ஒளிப் பிளம்பாய்
உன் முகம் பிரகாசிக்கிறது.



உன் உடலில் இருந்து
லட்சக்கணக்கான
மின் மினிகள்
பறக்கத் தொடங்குகின்றன.

இரவைப் பகலாக்குகிறாய்
பகலை இரவாக்குகிறாய்.

எங்கிருந்தோ பறந்து வந்த
மயில் தோகை இறகு ஒன்று
உன் பாதங்களில் விழுகிறது
மயிலிறகை எடுக்கும் போதே தெரிகிறது
உன் பாத விரல் நகக்கண்களில்
பால் போன்ற வெள்ளை மச்சங்கள்.

சிறு வயதில்
வீட்டு முற்றத்தில்
கைகள் இரண்டையும் விரித்தபடி
வானில் பறக்கும்
ஆலாவைப் பார்த்து
"ஆலா ஆலா பூப்போடு
பாலும் சோறும் தாறன் " என
மூன்று முறை சுற்றிய பின்பு
விரல் நகங்களைப் பார்ப்போம்
நகக்கண்ணில் தெரியும்
வெள்ளைப் புள்ளிகளை
ஆலா போட்ட
பூ வாக நினைத்து கொண்டாடுவோமே?.

உனக்கு மட்டும் ஆலா
இன்னமும்
பூப் போடுகிறதே?





## 34

என் கனவுக்குள்
கடல் புறாவை ஓட்டி வந்து
“இளைய பல்லவா எழுந்து வாடா” என்கிறாய்.
விழித்துப் பார்க்கிறேன்
என் மஞ்சள்அழகியாய் நீ.
மரக்கலத்தின் முகப்பில்
கம்பீரமாய்
காலூன்றி நிற்கிறாய்.
உலகை வெற்றிகொண்ட
ராஜராஜசோழனின்
கடற்படை
கதாநாயகியாய்
கடல்புறாவெனும்
காவியப்புறாவில்.



கடல் புறா
இருவரையும் சுமந்தபடி
தென்னவன் மரவடிக்குள் நுழைகிறது.
ஏற்கனவே ஏராளமான
பாண்டிய மரக்கலங்கள்
கிழக்குக்கரையில்
மீன் கொடி பறக்க
அசைகிறது.
செம்மலை யானைகளை
மரக்கலங்களில்
ஏற்றிக்கொண்டிருந்தனர்
பாண்டிய வணிகர்கள்
செம்மலைக்குடாவினை ஊடறுத்தும்
தென்னவன்மரவடியில் இருந்தும்
தென்னிந்திய யானை வர்த்தகம்
களை கட்டியபடியேயிருந்தது

தென்னமரவாடியாய் மாறிய
தென்னவன்மரபடி எங்கும்
சுற்றுகிறோம்.

தென்னவனின் ஆட்சியில்
அடங்கா வன்னிமையாக
ஓர் ராஜதானியின்
கம்பீரத்துடன்
பழம்பெரும் தமிழ் கிராமமாய்
கந்தசாமிமலை முருகன் ஆலயத்தில்
நித்தியகால பூஜைகள் நடக்க
தென்னவன்மரவடி கிராமமே தெய்வீகமாய்
ஆஹா இங்கு பேசும் தமிழின்
அழகுதான் என்ன
கவிதை கொஞ்சும் தமிழல்லவா?



வானம் கறுத்து
மழை கொட்டுகிறது
இடியோசையும்
எல்லை கடந்து
எல்லையை மாற்றுகிறது

இருவரும் மரக்கலத்திலிருந்து
இறங்கி வருகிறோம்.

கந்தசாமி மலைக்குக்கீழே
புதிதாக
பௌத்தமடம்.
முருகனைக் காணவில்லை
அவன் அண்ணன் இருந்த இடத்தில்
புதுச்சாமி ஒன்று.

காதல் கண்களில்
கந்தகம் பறக்க
“எங்கே எம் மக்கள் என்கிறாய்?”
“அவர்கள் அரசியல் அனாதைகள் ஆகினர்”
என்கிறேன்.

கிழக்கின் எல்லை
பறையனாற்றங்கரையில் நிற்கிறோம்.
வடக்கு கிழக்கை
இணைக்கும் எல்லை இங்குதான் உதயம்

“சிங்கமகன்
அரசியல் பூமியல்வா இது”
என்கிறாய்

“ஆண்சிங்கம்
கர்ஜிக்கும் ஆனால்
வேட்டைக்கு போவதில்லை
பெண் சிங்கம்



வேட்டையாடி வருவதில்
மிச்சத்தை புசிக்கும்
பேசாமல் படுக்கும்.
பாவம் வயதான சிங்கம்
அது என்ன செய்யும்?"
என்கிறேன்

"முதல் தொகையிருந்தோர்
இன்று மூன்றாமிடமாய்..
அறம் பிழைத்ததோ
அரசியல் பிழைத்ததோ?
என்னதான் முடிவிதற்கு
ராவணதேசம்
மிஞ்சுமா?" என்கிறாய்

"மாற்றம் தேவை
இளரத்தம்
புதுரத்தம் பாய்ந்தால்
பழங்கதை பேசிப்பேசி
கோமாவில் இருப்பவர்கள்
விழித்துக்கொண்டால் தப்பலாம்
இல்லை பழனிமலை
முருகன்தான்" என்கிறேன்.

சிரித்தபடி
என் கரங்களைத் தட்டிவிடுகிறாய்
கடல்புறாவின்
முதலாம் பாகம்
கீழே விழுகிறது.
விழித்துக்கொள்கிறேன்.

தென்னமரவடி
என்னை ஏக்கத்துடன்
பார்க்கிறது.



## 35

பூத்துக் கொட்டும்
உன் பிரியங்களின்
தகதகப்பில்
சிவந்திருக்கும்
கீழ் வான வெளியிலிருந்து
ஓர் பறவை
எழுந்து வருகிறது.
நேசத்தின் மொட்டவிழ்ந்து
காலத்தின் இதழ்
விரிந்து
உன்னையும்
என்னையும்
கவர்ந்து கொள்கிறது.

இருவரும்
காலத்துக்குள்
பயணம்போகிறோம்
காலத்தின் முச்சந்தியில் நின்றபடி
பாதையைத் தேடுகிறோம்.
நிகழ்காலத் தெருவழியே
பறந்துவருகிறது
ஓர் பட்டாம்பூச்சி.
பட்டாம்பூச்சியுடன்
பட்டாம்பூச்சியாய்
பறக்கத்தொடங்குகிறாய் நீ
உன் பின்னால் என் பயணம்
தொடர்கிறது.



வசந்தத்தின்
காற்றுவழி அறியும்
தூக்கணாங்குருவிபோல்
சந்தனத்தின்
வாசமறியும் நாகம் போல்
உன் காதல்
வாசம் அறிந்தவன் நான்.

விண்ணிலும்
இல்லை
மண்ணிலும் இல்லை
திரிசங்கு சொர்க்கம்
நமதானது.

மணல்வீடுகட்டி
விளையாடுகையில்
திடீரென வரும் பேரலை
பேய் அலையாய்
மணல் வீட்டை
அடித்துச்செல்லுமே
ஒவ்வொருமுறை
வீடு கட்டி முடிக்கும் போதும்
அலை வருமே
ஒவ்வொரு அலைக்கும்
இடையிலான கணத்தில்
உயிர்வாழ்ந்தது
நம்பிக்கை மட்டுமல்ல
நம் காதலும்தான்.



## 36

*வாழ்வெனும்*
*மாய நதியில்*
*நீந்திக்களிக்கிறேன்*
*காதலெனும்*
*கால வெளியில்*
*கவிதை படிக்கிறேன்.*



என் மனக்குகை
திறந்து பாய்கிறது
நான்
எனும் குதிரை
அதன் குளம்படி எங்கும்
பூக்கிறது
நீ
எனும் ஆதிரை.

நீ
என் ஆழ்மனக் கடலின்
மாயச் சுழி .
நான்
உன் வெட்கமெனும் ஒளியை
செதுக்கும் உளி .

சொற்கள் எனும் மாய உலகின்
சொந்தக்காரன் நான்
அச் சொற்கள் வடிக்கும் கவிதை உலகின்
மச்சக்காரி நீ.

நான் விண்ணில் பூக்கும்
தாரகை
நீ என் கையில் பூக்கும்
தாமரை.

நான்
வானம் பிளக்க
கவிதை எழுதி ஜாலம் செய்கிறேன்
நீ
என் மனம் எங்கும்
உன்னை எழுதி
மாயம் செய்கிறாய்.



நான்
நேசம் என்னும் தேரிலேறி
பவனி வருகிறேன்
நீ
பாசம் என்னும்
குடைபிடித்து
வாசம் தருகிறாய்.

நான்
மானுட நேசிப்பின் குரலாய்
வந்த தோழன்
நீ
மனுக்குலத்தின்
விடியலுக்காய்
என்னோடு
இணைந்த தோழி.

நான்
தாகத்தோடு
உன்னை அணைக்க
ஓடிவருகிறேன்
நீ
காதலோடு மகுடம் சூட
தேடி அலைகிறாய்.





37

ஒன்பதாம்
நூற்றாண்டின்
குலோத்துங்கச் சோழன் ஆட்சி
ஒரு பூ
ஒரு காதலை காவியமாக்கியது.

கவிச்சக்கரவர்த்தி கம்பரின் மகன்
அம்பிகாபதியாய்
சோழ மன்னன் முன்னே நான்
அமராவதியாய்
சோழ சாம்ராச்சிய
இளவரசியாய்
கைகளில்
பூக்கள் நிறைந்த
தங்கத்தட்டுடன்
நீ.

காதல்
எனும் வேள்வித் தீயில்
ஒரு காவியத்தின் அரங்கேற்றம்.

காதலித்தது குற்றமா
மன்னன் மகளை
காதலித்தது குற்றமா?



நூறு பாடல்கள்
இறையை போற்றி பாடுவது
காதலுக்கான சோதனையாகியது
எனக்கு அது சாதனை
உனக்கோ மனதில் வேதனை.
எண்ணிக்கை தவறியதால்
காதல்
எண்களை மட்டுமா
எண்ணத்தையும்
மாற்றியது.
ஓர் பாடல்
காமத்துப் பாட்டாகியதால்
வந்ததே வினை.

அமராவதியாய்
திரைச்சீலை நீக்கி
வெளிப்பட்டாய் நீ

உன் வெண்ணிலவு
முகம்
ஓர் வெண்ணிரவில்
நாம் கூடிக்களித்த
நினைவுகள்
வழிய

என் எண்ணங்கள்
சிறகடிக்க
நாம் கூடித் திளைத்த
பொழுதுகளை
பாடினேன்.

“என் இதழ்களில்
உன் ரத்தத்தின் சிவப்பு
உன் கன்னத்தில்
நான் தந்த முத்தத்தின்
சிவப்பு



இரு உயிர்கள்
கனன்று கொண்டிருந்தன.
மாடத்துள் பறக்கும்
சிட்டுக் குருவிகளின்
“கீக் கீக்” ஒலிகளிடையே கலக்கிறது
காமத்தின் ஒலி வெள்ளம்

உடலெங்கும் பரவுகிறது
காலா கால பந்தத்தின்
தொன்மை.

இது காதல்
கவிதையாம்
காதலைப்பிரித்தனர்
காதலர்களைப் பிரித்தனர்
ஆனால்
நான்பாடிய
தொன்னூற்றொன்பது
இறைபாடல்களும்
அழிந்துபோயின
ஒரு
காதல் பாடல் மட்டுமே
உயிர்வாழ்கிறது.

அம்பிகாபதி
அமராவதி
காதல் காவியமாய்.



## 38

அலுவலக வேலையாக
என் ஒரு நாள் பயணம்
ஆரம்பம்.
ஒரு நூற்றாண்டு கால தனிமையையும்
யுகாந்திரத்துக்குப் போதுமான
உன்
நினைவுகளையும் சுமந்து
கொண்டு செல்கிறேன்.

ஒரு நாள் இரவுதான்
ஆனால் அது சொல்லும் கதை
ஆயிரத்தொரு இரவுகளையும் விட நீண்டது.



புதிய இடம்
புதிய சூழல்
தனிமையில்
மௌனம் பருகி
மௌனம் பருகி
தனிமையின் போதையில்
என்னைத் தொலைத்திருந்த நேரம்.
என் கை தொலைபேசி ஒலிக்கிறது

“என்னங்க”
என்ற உன் குரல்
தனிமையின் ஆழ் கிணற்றில்
வீழந்து கிடந்தவனை
மேலிருந்து ஓர் குரல் அழைப்பதுபோல்..
பனிச் சிதறல்களாய்
சிதறுகின்றது
என் மௌனத்தின் கண்ணாடி.

“என்னங்க”
என்ற அந்த
ஒற்றை வார்த்தை
உயிர் வரை கேட்கும் இசை.
எத்தனை ஆயிரம்
சிம்பொனிகளாலும்
உருவாக்க முடியாத இசை
அது உயிரிசை
உயிரை உலுக்கும் இசை.

அருகில் இருக்கும் வரை
அதன் அருமை
தெரிவதில்லை
தனிமையில் அதுதான் தேவசங்கீதம்.

*"என்ன பேச்சையே காணல்ல?"*
*என்கிறாய்*
*உனக்குத் தெரியுமா*
*இன்னும் நான் அந்த*
*ஒற்றை வார்த்தைக்குள்*
*சுழன்று கொண்டிருப்பது?*



*உயிரின் அடி ஆழம் வரை*
*சென்ற அந்த வார்த்தை*
*பாலை வனத்தில்*
*பனிமழை*
*பொழிவதைப்போல்*
*அலாவுதீனின்*
*அற்புத விளக்குப் பூதம்*
*கேட்டதை எல்லாம் தருவதைப்போல்*
*அலிபாபாவும்*
*நாற்பது திருடர்களின்*
*கள்வர் குகை திறப்பு*
*மந்திரச் சொல் போல்*
*கீழ்திசை ஞானிகளுக்கு*
*வழி காட்டிய*
*வால் நட்சத்திரம் போல்*
*அந்த வார்த்தைக்குள் தானடி*
*இன்னும்*
*கட்டுண்டு கிடக்கிறேன்.*

*இனி என்ன*
*இந்த நீள் இரவின்*
*நான்கு யாமங்களும்*
*நீதானே என்னுடன்*
*வார்த்தையாய்*
*கலந்திருப்பாய்.*



## 39

*எழுதிக்கொண்டிருக்கிறேன்*
*இந்த உலகத்தின்*
*அதி உன்னதமான கவிதையை*
*காதலும்*
*காமமும்*
*ஆன்மீகமும்*
*கலந்து.*

*கடலையும்*
*வானத்தையும்*
*நட்சத்திரங்களையும்*
*இணைத்து.*

சூரியனையும்
சந்திரனையும்
சாட்சியாகக் கொண்டு.



மதுரைத்
தமிழ்ச்சங்கத்திலே
வள்ளுவர்
கம்பர்
இளங்கோ
ஒட்டக்கூத்தர்
சீத்தலைசாத்தனார்
தொல்காப்பியர்
என கவிஞர்கள் வீற்றிருக்க
அகத்திய முனியும் நக்கீரரும்
அரியாசனத்திற்கு
சரியாசனமாயிருக்க
என் கவிதை
அரங்கேறுகிறது.
உலகின் தலை சிறந்த
கவிதையாக
எனது கவிதையை
ஏற்றுக்கொள்கின்றனர்.

“எங்கே கவிதை?”
என்கிறாயா
உன்னிடம் கற்ற
கவிதைதான்
நீ தந்த கவிதைதான் கண்ணே!
நீ சொல்லும் வார்த்தைதான்
அது.
“அட சீ போங்க”



## 40

உன் பேரன்பின்
உன்னதம்
நயாகராவாய்
பாய்கிறது.
பரந்த
சமுத்திரத்தின் நடுவே
ஓர் படகைச் செலுத்திவருகிறாய் நீ
சமுத்திரக் கரைகளில்
கனவுகள் கரை புரளுகின்றன.
என் கவிதையில்
இருந்து ஒவ்வொரு சொற்களாய்
வான் நோக்கிப்
பறக்கத்தொடங்குகின்றன.

பட்டாம்பூச்சிகளுக்கு
இந்த வர்ணங்களைத்
தந்தது யார்?
வான வில்லின்
நிறங்களைப் பிரித்தது யார்?



காவியத்தின்
ஒவ்வொரு பக்கமும்
சில எழுத்துக்களை உன்மீது
தூவிச் செல்கிறது.

நீ
ஆண்டாளின்
நாச்சியார் திருமொழி
பாசுரங்களைப்
பாடிக்கொண்டிருக்கிறாய்
ஊனை உருக்கி
உயிரைப் பிழியும் இசையில்
கண்ணன் என்ன
இந்த மன்னனும்
மயங்கித்தான் கிடக்கிறான்.

உன் கண்களில்
வழிகிறது
எனதுறக்கம்
என் கண்களில்
தெரிகிறது
உன் மயக்கம்.

வீட்டில் முடங்கிக்கிடக்கிறோம்
ஆனால்
மனதளவில்

மயங்கிக்கிடக்கிறோம்
காதலில்.



கிருமி நாசமும்
செய்யும்
நேசமும்
வளர்க்கும்.

எதையும்
அணுகுவதில்
இருக்கிறது
அதன் வெற்றியும்
தோல்வியும்.

காலச்சர்ப்பம்
புதிய விஷக் கிருமியுடன்
காத்துக்கிடக்கிறது.

காலத்தின் வாய் பிளந்து
காதலைத்தான்
விழுங்கினாலும்
உயிரின் ஒற்றைத்திரியில்
எரிந்து கொண்டிருக்கிறது
நாளையை நோக்கிய
நம்பிக்கை.



## 41

வானத்தில் இருந்து
ஓர் அசரீரி ஒலிக்கிறது
“உனக்கானவளை
நீ
தேர்ந்து கொண்டாய்
இன்று முதல்
நீங்கள் இருவரும்
காதல் தேசத்தின்
கடவுளர்கள்”

கனவுக்கும்
நினைவுக்கும்
இடையே
மனம் அலை பாய
உன் கனவுக்குள்
உள் நுழைகிறேன் நான்.
நீ
காதல் தேசத்தின்
கடவுளாக
தலையிலே
காதல் மகுடத்துடன்
உறங்கிக் கொண்டிருக்கிறாய்
அருகில் இரண்டு தேவதைகள்
உனக்கு சாமரம்
வீசிக்கொண்டிருக்கின்றனர்.



அசரீரி வாக்கு
காலத்தின் வாக்கல்லவா
நான் காலத்தின்
கனவு வெளிக்குள்
செல்கிறேன்.
என்னைப்போலவே
ஒருவன்
வெண்குதிரைகள் பூட்டப்பட்ட தேரில்
என்னைக்கடந்து
விரைகிறான்.
கால உலகின்
அதிபதியை
சந்திக்கவென பயணிக்கிறேன்.
ஒரு பட்டாம் பூச்சி
பறந்து வந்து
என் தோளில்
அமர்கிறது.
எனக்குத்தெரியும்
அது நீதான் என்று

“ஏன் சொல்லாமல் சென்றீர்கள்?”
என்கிறாய்
“எங்கே?” என்கிறேன்
“என் கனவுக்குள் வந்துவிட்டு சொல்லாமல்
சென்றதென்ன?
உங்களை காணாமல்
காதல் தேசம்
கலங்கிப்போயிருக்கிறது
நீங்கள் காலத்துள் ஏன் வந்தீர்கள்”
என்கிறாய்.
புரிந்தும் புரியாத
ஒரு மாயத்தின்
மயக்கத்தில்

சிரித்துக்கொள்கிறேன்.
காலத்தின் பக்கங்களில்
எம் காதலை எழுதிச் செல்கிறாய்
நீ.



என் வண்ணமிக்க
கனவு
கண் திறந்தது.

நீ
ஓர்
அப்சரஸ் போல்
உறங்கிக்கொண்டிருக்கிறாய்.

அசரீரி சொன்னது
கனவு எனக்களித்த
நினைவா?
நினைவு
எனக்களித்த
கனவா?

ஆனாலும் ஒன்று
உலகின்
மிகப்பெரிய கோயிலாய்
நிலைத்து நிற்கும்
தமிழ் மன்னன்
கம்போடியாவில் கட்டிய
அங்கோர்வாட் போல
உலகின் மிக நீண்ட
காதலாய்
இந்த உலகுள்ளவரை
நாம் நிலைத்தே
நிற்போம்.



## 42

*நேற்றைய மழையிரவின்*
*மயக்கத்தில் நான்*

*வானவில்லின்*
*நிறங்களுக்கிடையே*
*தலைவாரிக் கொண்டிருக்கிறாய்*
*நீ*

*கடற்கரையில்*
*சிப்பிகளை*
*பொறுக்கிக் கொள்கிறாய்*
*யார் யார் அளைந்த சிப்பிகளோ*
*எவர் கை நழுவி விழுந்ததுவோ?*

*முத்தொன்று*
*சிப்பிகளை*
*பொறுக்கும் மாயம் இங்குதான்*

*நீ*
*எந்த சிப்பிக்குள்ளிருந்து*
*வந்தாயோ?*

*ஈரமான கடற்காற்று*
*உனக்கு குளிரும்*
*என்பதற்காய்*
*உன்னை கட்டிக்கொள்கிறேன்*
*நீ தழல் போல்*
*கனன்று கொண்டிருந்தாய்.*



கடற்கரை மணலைத் தட்டி விட்டு
வீடுவருகிறோம்
என்னதான் ஆசையில்
மணலோடு விளையாடினாலும்
மணல் கடலோடுதான்
மனம் வீட்டோடுதான்.

அகராதிகள் எங்கும்
உன் பெயருக்கான
அர்த்தத்தைத்
தேடிக் கொண்டிருக்கிறேன்.

காதல்
தேவதை
அழகு
மின்மினி
அதிசயம்
பட்டாம்பூச்சு
ராஜகுமாரி
வரலாறு

உன் பெயருக்கு இப்படித்தான்
ஒவ்வொன்றிலிலும்
ஒவ்வொரு அர்த்தம்.
ஆனால் என் அகராதியில்
உன்பெயருக்கான
அர்த்தமாக
என் பெயரை
எழுதி வைக்கிறேன்
நீ என்பது நான்
நான் என்பது நீ.



## 43

*இது தேவதைகள்*
*காதல் செய்யுமிடம்*
*இங்கே தேவதூதர்கள் மட்டுமே*
*அனுமதிக்கப்படுவர்.*

*குற்றால நீர் வீழ்ச்சியாய்*
*என் இதயத்தில்*
*வீழ்பவளே*
*வற்றாத மாவலியாய்*
*என் மனமெங்கும்*
*பூப்பவளே.*

*உன் வெண்பாத கொலுசின்*
*நிசப்த சங்கீதத்தின்*
*அதிர்வுகள்*
*கடல் அலைகளாய்*
*சமுத்திரப் பெருவெளியெங்கும்*
*ஆர்ப்பரிக்கின்றன.*

*எரிநெருப்பிடை*
*வாய் பிளக்கும்*
*காதலின்*
*உருகி எரியும்*
*ஒற்றைத்திரியின்*
*ஜுவாலை*



ஈர நெருப்பின் கதகதப்பில்
உன் அணைத்தல்
நீ தந்த முத்தத்தின் உயிர்
கால வெளிதோறும்
அலைந்தலைந்து
மீண்டு வருகிறது.

சிறகுகளில்
தீ சுமந்து
திசைகள் தோறும் பறக்கிறேன்.

என் சித்தத்தின்
உயிர்க்குருவி நீ
உன் மீதான பித்தத்தின்
கை மருந்தும் நீ

காதல் நோயும் நீ
காதல் மருந்தும் நீ

ஓடையெங்கும் தமிழ்
மணந்து ஓடவேண்டும்
என் கவிதை சிலேடையிலும்
நீ மலர்ந்து பாட வேண்டும்.

நினைவழியா வசந்தத்தின்
மதுர வெளியில்
உன் அணைப்பின்
பெரும் சுகம்
என் ஆயுள்வரை
தொடரட்டும்.





## 44

மீண்டும்
மீண்டும்
உருட்டப்படுகின்றன
பகடைகள்
இழப்பதற்கு
எதுவுமில்லா
ஓரினமாய் நாம்.

“இதோ பார் கண்மணி!
எனது மண்ணின்
அதிசயம் எங்கே?
என்று பார்க்க வந்தாயே பார்!”

வெந்நீர் கிணறுகள்
பவளப்பாறைகளும்
சுண்ணாம்புக் கற்களும்
நிறைந்த இடங்களில்
காணப்படுவது புதுமையல்ல
ஆனால்
ஒவ்வொரு கிணறும்
வெவ்வேறு கொதிநிலையில்
காண்பதே
இக்கிணறுகளின்
அதிசயம்
அகத்தியமுனி
கண்டுகொண்ட
வைத்தியம்.



மாமன்னன் ராவணன்
அன்னையின் மறைவிற்கு
சடங்குகள் செய்வதற்காய்
உருவாக்கப்பட்டதாக.
தக்ஷன கைலாசபுராணம்
திருக்கோணாசலப் புராணம்
கோணேசர் கல்வெட்டு
திருக்கரசைப்புராணம்.
வெருகல் சித்திரவேலாயுதர் காதல்
கோணமலை அந்தாதி என்று
ஈழத்தின் மூத்த
புராணங்கள் எங்கும்
ராவண மகாராஜாவுடன்
இணைத்தே பேசும்
உண்மைஇது.
இதன் நீட்சியே
சைவமக்கள்
தமது உறவினர்
பிதிர்க்கடன் செய்யவும்

ஆடி அமாவாசையில்
தந்தையர்க்கும்
சித்ரா பௌர்ணமியில்
அன்னையர்க்கும்
கிரியைகள் செய்யும்
புண்ணியத் தலமானது.
ஆனால்இன்று?
கன்னியா வெந்நீரூற்று
கை நழுவிச் சென்றதைப்பார்.



ஒவ்வொரு கிணறாக
தண்ணீர் அள்ளி
உன் தலையில் ஊற்றுகிறாய்
இனிமேலாவது
இந்த கிணறுகளின்
தோஷம் நீங்கட்டும் கண்ணே!.
சிவன் பூமியில்
மீண்டும் சிவன் ஆலயம் அமையட்டும்
பெண்ணே!

உறுதியான வேர்களை கொண்ட மரங்கள்
புயல் காற்றை எதிர்த்து நிற்பதுபோல்
உன் நினைவென்னும்
வேர்கள் என்னுள்
ஆழப் புதையுண்டிருக்கின்றன
என் மண்ணின்
நினைவுகளைப்போல்.

வெந்நீரூற்றில்
வெப்பம் குறைகிறதாம்
அது திருமலை தமிழர்தம்
நெஞ்சங்களில்
கனலாக கொதிக்கிறதே.

சொல்லப்படாத
பதில்களை விட
கேட்கப்படாத
கேள்விகள்
பெறுமதியானவை.



வாழ்க்கையே போராட்டமாக
போராட்டமே வாழ்க்கையாக
வாழ்ந்த சமூகத்தின்
போராட்டம்
இறுதியில்
பதினேழு ஏக்கர் நிலத்தையே
காப்பாற்ற முடியாத
திருமலையின்
அரசியல்வாதிகளையா உருவாக்கியது?
இதில்
சாணக்கியம்
என்ற சொல்லாடல்கள்வேறு.

“எங்கே இங்கிருந்த
சிவன் கோவில்”
என்கிறாயா?
“சிவனின் ஆட்டம் எல்லாம்
கோணேசர் மலையுடன் போச்சு
கோணேசர் மலையும் போச்சு.”

தம்பலகமம்
ஆதி கோணநாயகரும்
அரசின் வசம்.

கோணேசர் பூமி என்றதும்
தமிழர்தம் தலைநகரம் என்றதும்
பொய்யாய்

பழங்கதையாய்
போனதிங்கே.



ஒரு கதிரையும்
ஒரு பிரதேச செயலகமும் மட்டுமே
எம்வசம்
நாளை அதுவும்
விதிவசம்.

வேரோடும்
வேரடி மண்ணோடும்
பிடுங்கப்படுகிறோம்
என்பதை
இன்னும்
அறியாமல் இருக்கிறோம்
என்பதே
மிகப்பெரும் கொடுமைதான்
ராசாத்தி!

## முற்றுப் பெறாத முன்னுரைகள்

**(நூற்றுக்கணக்கான முக நூல் பதிவுகளில் இருந்து ஒரு சில...)**

"இதுதான் இரண்டாவது உலக அதிசயம்' என்கிறேன் / 'முதலாவது அதிசயம் எது?' என்கிறாய் / 'அது நீதான் என்கிறேன்.' / வெட்கத்தின் கரங்கள் உன் முகம் மூட / சொர்க்கத்தின் கதவுகள் மெல்லத் திறக்கின்றன. என்றும் அழியா சிகிரியா ஓவியக்கலவையின் / மர்மம்போலவே தொடரும் அதன் வரலாறும்.. பல கதைகள் பேசியது. / எம் நினைவுகளை மலையில் உலவ விட்டு நாம் இறங்குகிறோம். / மலையாக ஒரு அதிசயம் மண்ணில் கிடக்கிறது / அலையாக காதல் அலையாக ஓர் அதிசயம் என்னுடன் கூட வருகிறது."

மும்தாஜூக்காக தாஜ்மகாலை ஷாஜகான் கட்டுவித்தான் - மைக்கல் ஆஞ்சலோ சாகாவரம் பெற்ற மோனாலிசாவை தந்ததால் வாழ்கிறான். சிகிரியாவை - தனது அதிசயக் காதல் அலையாக மாற்றிய ஒரு அதிசயத்தை மைக்கல்கொலின் தந்துள்ளார் - வாழ்த்துகள்...

**– கவிஞர். ச. அருளானந்தம்,** திருகோணமலை

ஒரு கவிஞனுக்கு மனைவியாக வாழ்வதும் ஒருவரமே. வாழ்த்துகள் இருவருக்கும்.

**– மண்டூர் அசோகா,** மட்டக்களப்பு

அருமை **– அன்னலட்சுமி ராஜதுரை,** கொழும்பு

Love is great - Rajes Bala. Londan

காதலையும் கனதியான விடயங்களையும் கலந்து அற்புதம் நிகழ்த்திய கவிச்சித்தர். பாராட்டுகள்

**–வே.தில்லைநாதன்,** திருகோணமலை

தேனீர் கோப்பையில் / புயல்தானெழும். நீங்கள் அதிஷ்டசாலி /உயிரைத்தழுவ / ஆவிபிடித்து அகிலத்தை மறப்பது.
காதலோடு மகுடம் சூடி / கவிதை சொல்லும் பாவலருக்கு வாழ்த்துகள்.

**– கவிஞர் ஷெல்லிதாசன்,** திருகோணமலை

முள்ளிவாய்க்காலில் வீழ்ந்தாலும் கீழடியில் எழுந்து நிற்போம்.....! அருமை! இந்த கவிதைகள் உண்மையை மட்டும் உரைக்கிறது. படிக்க வேண்டிய வர்கள் படித்து நடக்க வேண்டியவை நடந்தால் உரிமைகள் பாதுகாக்கப்படலாம்.

44 வித்தியாசமான கவிதைகள். ஊர்கள், வரலாறுகளின் உன்னதங்களை உணர்த்தி நிறைவில் நம் உரிமைகள் பற்றி பேசுகிறது. அனைத்தையும் காதலுக்குள் நுழைத்து அதிசயம் செய்துள்ள கவிஞரின் முயற்சி அபாரம்! காதல் அழியாதது போன்று இந்த கவிதைகளும் என்றும் நிலைத்து வாழும்! பாராட்டுக்கள் கவிஞரே!

**– லோரன்ஸ் செல்வநாயகம், தினகரன் ஆசிரிய பீடம், கொழும்பு**

கல்லடிப்பாலம் பல காதலரின் களம்.. நீங்களும் அனுபவித்திருக்கிறீர்கள்.... கால சர்ப்பம் புதிய விஷக்கிருமியுடன்.... அருமை, வித்தியாசமான கற்பனை

**– R. M. நௌசாத், கல்முனை**

பரந்த கவிச்சமுத்திரத்தில் உன் படகு ஏனோ அது தனி ரகம் தான்...
நண்பா காலச்சுற்றோட்டத்தில்... ஏமாற்று அரசியல் வித்தைகளில் படிப்படியாய் அள்ளுண்டு போகும் எம் தாய் மண் வரலாறுகள் போலல்லாது... கனக்கும் இதயத்தோடு... படபடக்கும் இதய துடிப்போடு, "கனிவான காதல்" நினைவுகளும் கடந்து வந்த நாட்களின் நிஜ நிகழ்வுகளுமாக... நீ அழைத்து வந்த "என் ப்ரிய ராஜகுமாரி" என்றும்... "வீணையடி நீ எனக்கு" என்றும்..." "எழதித்தீரா பிரியங்கள்" என்றும் "என் இனிய பட்டாம் பூச்சிக்கு" என்றும் உலவிய உணர்வுகள் தொகுப்புகளாக பாதுகாக்கப்பட வேண்டியவையே... இளமைக் காலத்திற்குள் இழுத்து சென்றவனே... நன்றி நண்பா...

**–து.ரகுராம், திருகோணமலை**

"அட சீ போங்க" என் இனிய பட்டாபூச்சி தொடரில் என்னைக்கவர்ந்த இனிய வரிகளில் ஒன்று. இப்படி பல உண்டு. வாழ்த்த வார்த்தை எனக்கு தெரியாது ஆனால் என் இனிய பட்டாம்பூச்சி வெளியீட்டு விழாவில் என்றோ ஒரு நாள் சந்திப்போம் என்ற நம்பிக்கை மட்டும் உள்ளது கொலின் "என் இனிய பட்டாம் பூச்சி" எம் தமிழுக்கு ஒரு புது வரவு. தொடரட்டும். பட்டாம் பூச்சி சிறகடித்து உச்சம் எட்டும் வரை பறக்கட்டும்.

**– கந்தையா தவராஜா , மட்டக்களப்பு**

அடச் சீ போங்க...highlight
எத்தனையோ பேர் மனசுக்குள் போட்டு மென்றுகொண்டிருக்க அதை எழுத்தில் வடித்து சபையேற்றிய வித்தகக் கவியே உமக்கு அரியாசனத்தில் ஓர் சரியாசனம் தந்தோம் வாழ்க உம் தமிழ் புலமை...
அத்தனை கவிதைகளும் அற்புதமானவை. அந்தக் காதல் யாத்திரையில் உலகை வலம் வந்ததுபோல் மன நிறைவு. தொகுப்பு விரைவில் பட்டாம்பூச்சி களின் கூட்டமாய் பறந்துவரட்டும்.

**–பிரியா ஜெதீஷ்வரன், சிரேஷ்ட விரிவுரையாளர், மட்டக்களப்பு**

திருமலையின் குரலாய் உங்கள் கவிதை வரிகள் உள்ளன.
ஒரு பறவை / எழுந்து வருகிறது / நேசத்தின் மொட்டவிழ்ந்து / காலத்தின் இதழ் விரிந்து.... அருமை கவியே

**–கவிஞர் யோகானந்தம், திருமலை**

ஒவ்வொரு கிணறாக தண்ணீர் அள்ளி / உன் தலையில் ஊற்றுகிறாய் / உறுதியான வேர்களைக் கொண்ட மரங்கள்/புயல் காற்றை எதிர்த்து நிற்பதுபோல். சொல்லப்படாத பதில்களைவிட / கேட்கப் படாத கேள்விகள் பெறுமதியானவை. பெறுமதியான கவிதை வரிகள் கம்பீரமானவை. அருமை அற்புதம். அன்புக் கவிஞரே. நண்பரே வாழ்த்துகள். என் இனிய பட்டாம் பூச்சி இனிமேல் சிறகடித்துப் பறக்காதா என்ற ஏக்கம் நெஞ்சினிலே.

**–லோகராஜா லோகராஜா, திருமலை**

அத்தனை கவிதைகளும் அற்புதமானவை. ஒரு நூ(லில்)லாக கோர்த்துக் கொள்ளுங்கள் அது எங்களுக்கும் கிடைக்குமல்லவா?

**–ரவீந்திரன் ரவி, களுவாஞ்சிக்குடி**

காதலுக்கூடாக எம்மினத்தின வரலாற்றைச் சொல்வோம்..... பண்டையகால காதலை, காதலர்களை இன்றைய தலைமுறைக்கு உணர்த்துவதாக கவிஞரின் அவ்வரிகள் அருமை....அருமை.
என் இனிய பட்டாம்பூச்சிக்கு காதல் கவிதைத் தொடர் இன்றுடன் நிறைவு பெறுவதாக குறிப்பிடும் விடயமானது வாசகர் எனும் வகையில் மிகுந்த ஏமாற்றத்தை தருகிறது.

**–தங்கராசா புஷ்பராசா, திருகோணமலை**

“வேரோடும் வேரடிமண்ணோடும் பிடுங்கப்படுகிறோம்..” உண்மையான வரிகள்

**–நக்கீரன் மகள், டென்மார்க்**

We all have a good time with your daily writings. Thank you i enjoy it’s different and interesting way and thinking.
Super your imagination with our history. One of my favorite book KADAL PURA.

Soundraraja Raj Ruban, Germany

“முள்ளிவாய்க்காலில் வீழ்ந்தாலும் கீழடியில் எழுந்து எம் காதலுக்கூடாக எம் இனத்தின் வரலாற்றைச் சொல்வோம்” அழகான வரிகள் தொடரட்டும் உங்கள் காதல் கவிதை.

இப் பிரபஞ்சத்தில் மட்டுமல்ல செவ்வாய்க் கிரகத்திலும் உங்கள் கவிதை மூலம் காதல் மலரட்டும்.
இருவரும் இணைந்து புதியதொரு மதத்தை உருவாக்குவோம். காதல் கடவுளாக நாங்கள். அற்புதமான வரிகள்...

**– சித்ரா லிங்கேஷ்வரன்,** கனடா

பட்டாம்பூச்சியின் சிறகசைப்பு தொடரட்டும்

**–முல்லை முஸ்ரிபா,** கொழும்பு

"ஷாஜகானின் காதல் மாளிகை / ரசிப்பதற்கு / உங்கள் மாளிகை நான் வசிப்பதற்கு" என்கிறாய்... என்ன அருமையான வரிகள்..
எங்களையும் முருங்கை மரம் தாவும்
வேதாளத்தைப்போல் ஆக்கிவிட்டிர்களே?

**– ஜே. எச். இரத்னராஜா,** மட்டக்களப்பு

ஒரு காதல் திருமணம் இப்படித் தான் பல பாம்புகளைக் கடந்து மேலேற வேண்டியிருக்கும் என்பதை மிக நேர்த்தியாக உங்கள் கவிதை மூலம் எழுதியிருக்கிறீர்கள். பலரது காதல் வாழ்க்கைக்கும் இந்த கவிதைக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. எனக்கும் கூட. வாழ்த்துகள் வாழ்த்துகள்.. \\அட காதல் ஆக்ராவின் தாஜ்மகால் தேடி நகர்ந்து விட்டதோ?.. ஒவ்வொரு காதலும் ஜீவனோடு வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறது. என்ன ஒன்று அதை வெளிக் காட்டவும் பரஸ்பரம் பரிமாறிக் கொள்ளவும் தான் சந்தர்ப்பம் இன்றி அலைகிறோம். காதல் வயோதிபத்தில் மிகவும் கனதியானது. எழுதுங்கள் உங்கள் காதலால் நாங்களும் காதலித்துக் கொண்டிருப்போம்.

**–பூர்ணிமா கருணாகரன்,** கொழும்பு

இலக்கிய நயம் - தருவது மகுடாதிபன்.

–DR. **சதீஷ் குமார் அருமைநாதன்,** திருகோணமலை

Excellent lines Anna! - **Sathya zarmila**, Jaffna

வரலாற்றுப் பாதை நோக்கி கவிஞரின் பார்வை திரும்பியிருக்கிறது. இது இலகுவான விடயமல்ல. வரலாற்றை நன்கு கற்று தேர்ந்துதான் இத்தகைய விடயங்களை கவிதைக்குள் புகுத்த முடியும். ஆகவே வரலாற்றில் கவிஞர் எவ்வளவு தேர்ச்சி பெற்றிருக்கிறார் என்பதற்கு இக்கவிதைகளே சான்று பகர்கின்றது. வாழ்த்துகள்.

**–கி.யோகநாதன்,** மட்டக்களப்பு

அற்புதம் அற்புதம். நிச்சயமாக இது கவிதையல்ல, பல்லாயிரம் ஆண்டுகளுக்கு நிலைத்து நிற்கும் கல்வெட்டு என்பதே என்மனக் கருத்தாகும். சிலையாக திகழ்ந்த நம் தமிழ் தெய்வத்தை உணர்வும் உயிரும் ஊட்டி எம்மையெல்லாம் விழுந்து வணங்கி ஆசிகள் பெற வைத்தமைக்கு நன்றி. அடுத்து கவிஞரின் உள்ளத்தே ஊறிக்கிடந்த குருபக்தி இலக்கியத் தந்தை வ.அ.இ.வை பதிவு செய்த தீர்க்கதரிசனம் போற்றதக்கது காலத்தால் அழியாத வரலாற்றை கல்வெட்டாக செதுக்கிய சிற்பியே வாழ்த்துகிறேன்

**– திருமதி.யோகமலர் சுந்தரலிங்கம்,** திருகோணமலை

“உருவம் சிறியதானாலும் நிமிர்ந்து நின்றது தமிழ் முறிந்தாலும் வளையாது எமது தமிழ்” என்று தமிழை பெருமை செய்தவர்களுக்கு வ. அ. போன்று அழிவு கிடையாது. கொலின் வாழ்த்துகள்,
தொடரட்டும் தமிழின் தொன்மைப் பயணம்.

**– அகுஸ்தின் நவரெத்தினம்,** மட்டக்களப்பு

மூங்கிலிலே பாட்டிசைத்து காற்றலையை தூதுவிட்டேன் இது ஞாபக வரிகள் உங்கள் வரிகள் ஆன்மாவை வருடுகிற வரிகள் காதலுக்கு கடிவாளவமும் இல்லை கரையும் இல்லை அது கரைபுரண்டோடும் வற்றாத ஜீவநதி

**– மேரியன்,** மட்டக்களப்பு

உன் பேரன்பு / நதியெனப் பாய்கிறது. /நான் நீந்திக்கொண்டிருக்கிறேன். / நதிநீரும் வற்றாது / என் நீச்சலும் நிற்காது / காலாதி காலத்துக்கும் / நதி பாயும் ஓசையும்நீச்சல் சத்தமும் / ஒலித்துக் கொண்டேதானிருக்கும்.....
“ஓர் ஆண் கொண்டாடுவதற்கு / ஒரு பெண்ணும் / ஒரு பெண்ணுக்கு கொண்டாடப்படுவதற்கு / ஓர் ஆணும் கிடைத்து விட்டால்
அருமை நண்பா அருமை....

**– பிரபாகரன் ஆறுமுகம்,** மட்டக்களப்பு

கதலித்தாலும் திருமணத்தை தடுக்கும் வில்லன் செவ்வாய் கிரகத்தில் குடியேறும் காதல் அல்லவா இது? இந்த காதல் பூமியையும் தாண்டி வாழும் வாழ்த்துகள் கொலின்.

- **எஸ்.லிங்கேஷ்வரன்,** கனடா

அழகிய வடிப்பு **– வாசுகி குணரட்ணம்,** மட்டக்களப்பு

Very beautiful words - **Priya kathir,** Jaffna

நீங்கள் சொல்லி வருகின்ற பட்டாபூச்சி கவி வரிகள் எமது பாரம்பரிய விடயங்களை ஞாபகமூட்டுவது மட்டுமன்றி அடுத்த தலைமுறைக்குரிய பதிவாகும் வாசிக்க அருமை வாழ்த்துகள்

**- Vijayeswary manisegaran,** Batticaloa

விஞ்ஞானிகளை வென்று வந்த ஞானக் கவியே பல்லாண்டு வாழ்க! தென்ன மரவாடியின் தற்கால நிலைமையினை கண்ணாடி போல் காட்டியுள்ள அன்புக் கவிக்கு கோடி வணக்கங்கள்

**- Sara chandran,** Colombo

அருமையான உணர்வலைகள் / அழகான தமிழில் / அற்புதம் வாழ்த்துகள்

**–குமுதினி யோகராஜா,** மட்டக்களப்பு

அழகான கவிதை, வித்தியாசமான சிந்தனை

- **Gajenthran Ruthrakumar,** UK

புத்தளத்தில் பரபரப்பு / காதலைக்காணவில்லை / ஒரு தகவல் / அது கவிஞர் கொலின் வீட்டில் / சிறை வைக்கப்பட்டுள்ளதாம் / சுலோகங்களுடன் ஓர் ஊர்வலம் புறப்படுகிறது / காதலை விடுதலை செய்ய / கரங்களில் பதாகைகள் / என்ன கூறுகின்றன தெரியுமா / "காதல் வாழ்க" / "கவிஞர் கொலின் வாழ்க"

**– கவிஞர் இ. புஸ்பராஜன்,** புத்தளம்

காலத்தின் வாய்பிளந்து / காதலைத்தான் விழுங்கினாலும் / உயிரின் ஒற்றைத்திரியில் / எரிந்து கொண்டிருக்கிறது நாளைய நம்பிக்கை !!! மிக அற்புதமான வரிகள் !!! / வாழ்த்துகள் நண்பரே !!!

**–அஷ்ரப் புதுநகரான், நிந்தவூர்**

மாயக்கற்பனை / நீ என்பது நான் / நான் என்பது நீ ! ஆகா!

**– அஷ்ஃபா அஷ்ரஃப் அலி,** ஏறாவூர்

"வானவில்லின் நிறங்களுக்கிடையே தலைவாரிக் கொண்டிருக்கிறாய் நீ "உங்கள் அபார கற்பனைத் திறன் மெய்சிலிர்க்க வைக்கின்றது சிறப்பு.

**–வசந்தி அன்ரனி,** மட்டக்களப்பு

சித்தத்தின் / உயிர்க்குருவி / பித்தத்தின் / கைமருந்து / அருமை.....

**–சுஜந்தினி யுவராஜா,** திருகோணமலை

வாவ்.. அழகான காதல் கவிதை.. அருமை வாழ்த்துகள் நண்பரே.
-Fiyas Mohamad, கொழும்பு

உன் தீயைஎனக்கு / கடத்தி விடவும் கூடும்.. / ஆதலினால் / பிறந்தநாள் வாழ்த்தோடு / நின்று விடுகிறேன் / பாதியிலே.. /உன் கவிதை மீதான வாசிப்பை....

**—பதுளை சேனாதிராஜா,** கொழும்பு

//உன் உடலெங்கும் தொங்கிக் கொண்டிருக்கிறது என் கவிதைகள் ஆடைகளாய்// திறமான கற்பனை. மகிழ்ச்சி
//உன்னைப் பின் தொடர்வதே / என் புதிய சிலுவைப்பாதையாய் / கரங்களில் காதல் சிலுவையுடன்.. / நான்.// அருமையான வரிகள். மகிழ்ச்சி
//உன்னைத் தேடிக்கொண்டிருக்கும் / என் தேடலின் தாகம் தணியாது...// தாகத்திற்கு நீர் இப்போதைக்கு வேண்டாமே. தாகமாய் இருப்பதும் ஏக்கத்தை அறியும் கருவியாய் தொடரட்டும். மகிழ்ச்சி

**— திருச்செல்வம் கதிர்வேல்பிள்ளை,** திருகோணமலை

என்ன ஒரு அதீதம், அடாவடித்தனம்... கற்பனையில் **!!**
காட்சிகளின் தெரிவு, கற்பனையின் வெளிப்பாட்டை தெளிவுறுத்தும்போது, கவி வரிகளின் பரிமாணம் பூரணம் பெறுகிறது... அழகு **!!!**

**— பானுசுதாகரன்,** திருகோணமலை

புதுப்புது அர்த்தங்களின் சொந்தக்காரன் கொலின்
வரிக் கவிதையை பலதடவை வாசிக்க வைத்து விட்டது.

**—இரா. தவராஜா,** மட்டக்களப்பு

நீங்கள் ஒரு ஞானப்பழம். அருமையான வரிகள்

**— கௌரி சங்கர்,** மட்டக்களப்பு

உங்கள் காதல் மதம் எட்டுதிக்கும் பரவட்டும். வாழ்த்துகள் நண்பா.

**—கிருஷ்ணபிள்ளை யோகநாதன்,** மட்டக்களப்பு

அற்புதமான கவிவரிகள். நானும் மதம் மாற முடிவெடுத்துவிட்டேன்.

**—மயில்வாகனம் மகாலிங்கம்,** ஜேர்மன்

காதலால் காதலியை காதலித்து வர்ணிக்கும் உங்கள் கவி அழகு
காதலின் தேடல் தொடரட்டும் நாங்களும் மெய் மறந்து ரசிக்க அருமை

- **அரிஅக்சயன் சவுந்தர்,** மட்டக்களப்பு

அழகுக்கு அழகு சேர்க்கும் அழகான கவி நடை. மின்மினிப் பூச்சியையும், பொன்வண்டையும் இப்போ காணக்கிடைப்பது அரிதிலும் அரிதாயிற்றே. வருங்காலச் சந்ததிக்குப் போட்டோவிற் காட்டவும் முடியுமோ தெரியாது.

மீன்கள் பாடவில்லை ஆனால் அழுத சத்தங்கேட்டது.பாடவில்லை, அழுதது. ஈரடி குறள் போல இரு சொல்லிலேயே ஆயிரம் அர்த்தங்கள்...அவற்றை நினைக்க நெஞ்சு நெகிழ்கிறது. காதல் சுவையோடு நம்மவர் பட்ட கஷ்டங்களையும் நினைவு கூரல் அதைக் கூறல் மிகச் சிறப்பாக உள்ளது. அது கைவந்த கலை. மகிழ்சி....தொடரட்டும்.

**—கவிஞர் கெஜதர்மா,** திருகோணமலை

//...விடியும்வரை மீன்கள் பாடவேயில்லை. / ஆனால் மீன்கள் அழுத சத்தம் கேட்டது கண்ணே! / எம் மக்கள் நிலை கண்டு மட்டக்களப்பு வாவி மீன்கள் அழுத சத்தம் கேட்டது....// தாபத்திலும் சோகத்தின் கீற்றுக்கள்....!/ உறுத்தல்கள்!/ அருமை!! வாழ்த்துகள்!!!

**—சிவலிங்கம் ஆறுமுகம்,** கொழும்பு

அருமை...அனுபவத்தின் தரிசனம், / நம் மண்ணின் வாசத்துடன்,/ அழகு தமிழில் ஆழ்ந்த கருத்துக்கள், பாராட்டுக்களுடன்...
வாழ்த்துகள் சகோதரம்

**—அன்னை அன்னைமரியா,** மூதூர்

ரசனையாய் உள்ளது கவிஞரே...

**—கவிஞர் மூஸா விஜிலி,** கல்முனை

கவிதைகள் அருமையாக உள்ளது.

-Dr. **சோமசேகரன்,** கனடா

அருமை நண்பனே உனது கவிதை பிரமாதம்!

**—ரபீக் பிர்தௌஸ்,** கல்முனை

Good இவ்வளவு பாம்புகளையுமா வென்றீர்கள்? வாழ்வில் வெற்றிபெறுதல் என்பது இதுதான். வாழ்க!

**—வடிவழகையன்,** யாழ்ப்பாணம்

அருமையான உவமைக் கவிதை. இது கற்பனையா அல்லது உண்மையா என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால் நூறு கட்டங்களையும் கடக்கும் வரை நானும் சேர்ந்தே பயணித்ததான ஒரு உணர்வு.

**—முரளிதரன் முரளி,** திருகோணமலை

ஓர் அரசாங்கத்தினை நிர்வகிப்பதில் மந்திரியானவன் எவ்வளவு முக்கியத்துவம் பெறுகின்றானோ, அதேபோன்று குடும்பம் என்ற இராஜ்சியத்தை வெற்றிகரமாக கொண்டு செல்வதற்கு ராணியாகிய மனைவியின் பங்கு இன்றியமையாதது. என்பதை அருமையாக உணர்த்திச் சென்றிருப்பது பாராட்டுக்குரியது. **—கி. யோகநாதன்,** மட்டக்களப்பு

அருமையான கவிதைகள். வாழ்த்துகள் கவிஞரே.

**— சுதா பேரம்பலம்,** கனடா

உங்களுடைய பேனா பல அற்புதங்களை நிகழ்த்துகின்றது

**—முருகேசப்பிள்ளை குகதாசன்,** மட்டக்களப்பு

சிகிரியாவின் சித்திரச் செதுக்கலை சொற்சுவையில் சேர்த்தெழுதி ஆதிக்குடியின் அரசு தொட்டு காதல் நயத்தில் கனிந்த கவிதை அழகு

**—தியான் பரா,** ஜேர்மனி

சொல்கள் செல்கள் துளைக்கிறது / காதலின் நாயனம் கள்ளூற்றிக் கொடுக்கிறது / வரிகளில் தான் எத்தனை எத்தனை வாசனை /அது வாயூற வைக்கும் அந்த ஈசனை / “படகையும் இரவையும் நகர்த்திக் கொண்டிருந்தாய்”/ நான் ஆறுபோல அப்படியே உறைந்த இடம் இது. / “எம்மக்கள் நிலைகண்டு வாவி மீன்கள் அழுதன” / இந்த ஒருவரியில் எத்தனையோ ஞாபகங்கள் துண்டாடப்படுகின்றனவே / காதலோடு வந்த கவிதை கண்ணீரோடு முடிந்திருக்கிறது / படித்து வெகுநேரமாகியும் இன்னும் காய மறுக்கிறது கண்./ இதைவிட்டு வெளியேற எத்தனை யுகம் ஆகுமெனத் தெரியவில்லையே / கம்பனுக்குப் பிறகு கரையேற முடியாமல் கண் பொத்த வைக்கிறது உன் கவிதை. **—விக்டர்தாஸ்,** தமிழ்நாடு

மாயக் கற்பனை / வாழ்க்கை ஒரு சதுரங்கம் என்பார் / அதை காதலன் காதலி / கணவன் மனைவி என்ற இணைபிரியா உறவோடு / சதுரங்கத்தை இணைத்து / ராணியின் சதுரங்க சாகசங்களை / அழகான சொற்களில் வரித்துரைத்த / உங்கள் வல்லமைக்கு வாழ்த்துகள்

**—சின்னராஜா காண்டீபன்,** திருகோணமலை

அருமையான கவிதைகள். 80களின் இறுதிப்பகுதியிலும் 90இன் ஆரம்பத்திலும் தனது பாதுகாப்பை பற்றி சற்றும் கவலைகொள்ளாமல் பலவிடயங்களை பயமின்றி விமர்சித்த, நான் பார்த்து வியந்த, இரசித்த ஒரு கலைஞன்/கவிஞன். உங்கள் கலைப்பயணம் தொடர வாழ்த்துகள்.

**—கஜேந்திரன் ருத்ரமூர்த்தி,** லண்டன்

●●●



கொலினின் காதலுக்கான
களமும் கணமும் விரியும் வகை;
நிலவின் கீழே பாலத்தடியிலே
தோன்றுகிறது;
நிலவின் பார்வையாகவே
தோன்றுகிறது;
குன்றின்மீது கடவுளராய்த்
தோன்றுகிறது;
கடவுளையே சர்ப்பம் பற்றி
மிதித்துக் கேள்வி கேட்கத்
தோன்றுகிறது;
கனியிலே தோன்றுகிறது;
கல்லிலே தோன்றுகிறது;
காதணியிலே தோன்றுகிறது;
கடல் கடந்த சாம்ராஜ்யங்களிலே
தோன்றுகிறது.
காண்பதிலெல்லாம்
காணுகையிலெல்லாம்
கவிதையை முளைக்கச் செய்வது
ஒரு கவிஞனுக்காகக் கிட்டிய
அமுதசுரபி.

- சித்தார்த்த சேகுவேரா

ஒரு மனிதனின்
ஆதார உணர்வுகள்
எக்காலத்திலும்
நல்ல கவிதைகளாகவே
உருமாற்றம் பெறும்
என்பதற்கு
இந்நூல் ஓர் உதாரணம்.

- கவிஞர். அ.ச.பாய்வா

கொலினின் காதற் கவிதைகளுக்கு
அகவை முதிர்வதில்லை
தொடர்ச்சியாக இளமையும் அன்பும்
ததும்புவதாகவே தொடர்கின்றன.
காலத்தால், சூழலால் சலிக்காது
கணத்துக்குக் கணம் காதலில்
அமிழ்ந்திருப்பதென்பது பெரும்பேறு.
அப்படியான களியுள்ளம் வாய்த்தவர்
கவி கொலின்.

- பேராசிரியர் க.இரமணிதரன்
(சித்தார்த்த சேகுவேரா) - அமெரிக்கா

ஒரு காதல் கவிதைத் தொகுப்பில்
தமிழ் இனம் பற்றி
தமிழ் நிலம் பற்றி
தமிழ் மொழி பற்றி
தமிழ்ப் பாரம்பரியம் பற்றி
தமிழ்ப் பண்பாடு பற்றி
இதன்முன் இந்தளவு எவரும் பேசியதாக
என் கண்ணுக்கெட்டிய தூரம் வரை
தகவல்கள் இல்லை என்பதே உண்மை.

- விக்டர்தாஸ் - தமிழ்நாடு

ISBN: 978-624-5849-04-8
மகுடம்
9 786245 849048
750.00